விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 03 சனிக்கிழமை (19.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

MADRAS CEMENTS LTD
ரா ம் கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

**❋சனல் 4 பிரசாரத்தை தடுப்பது ❋சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடுவது**

# போர்க்குற்ற விசாரணைகளின் மூலம்

# நூற்றுக்கணக்கான படையினருக்கு தண்டனை

## நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை-கொழும்பு ஊடகம் செய்தி

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்ட இலங்கையின் கொலைக் களம் ஆவணப்படத்தில் காணப்படும் இராணு வத்தினரை கைது செய்து இலங்கை சட்டத்தின் ஊடாக தண்டனை வழங்குமாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்து ரைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் உலகத்தமிழர் பேரவை 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வதேச ஊடகங் களுக்கு வழங்கிய விடுதலைப்புலிகள் அமைப் பின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷி டம் விசாரணை நடத்தும் வீடியோவில் உள்ள இராணுவத்தினரையும் அடையாளம் கண்டு, அவர்களையும் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தமாறும் ஆணைக்குழுவின் பரிந்துரை யில் அடங்கியுள்ளதாக அச் செய்தியில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகம் வெளியிட் டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவையும் போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாக் கும் பொருட்டு, மேஜர் தரத்திலான மூத்த இராணுவ அதிகாரிகள் உட்பட நூற்றுக்கணக் கான இராணுவத்தினரை கைது செய்து விசாரணை செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தங்களை யும் விசாரணை *(20ஆம் பக்கம் பார்க்க)*

# வெள்ளைக்கொடி வழக்கில்

# சரத் பொன்சேகா குற்றவாளி

## 3 வருட சிறைத் தண்டனை; நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றவாளி என இனங்கண்ட நீதிபதிகள் குழு, அவருக்கு 3 வருட சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பளித்தது. எனினும் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யவுள்ளதாக பொன்சேகா தரப்பு சட்டத்தரணிகள் தெரி வித்தனர். *(20ஆம் பக்கம் பார்க்க)*

## வாவியில் மூழ்கி ஐவர் பரிதாப மரணம்!

(கிரியுல்ல)

கிரியுல்ல பிரதேச வாவியொன்றில் மூழ்கி 4 பெண்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந் துள்ளனர்.

உறவினர் வீடொன்றுக்கு சென்றிருந்த அவர்கள் நேற்று பிற்பகல் குளத்தின் அணைக்கு அருகில் குளித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப் பிட்டார்.

இதன் போது ஒருவர் அணையில் சிக் கியதுடன் அவரைக் காப்பாற்ற முற்பட்ட மேலும் நால்வரும் அனர்த்தத்தில் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சடலங்கள் தம்பதெனிய வைத்திய சாலை யில் வைக்கப்பட்டுள்ளன. (பா)

## நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எனக்கு கிடைத்த ஆசீர்வாதம்



### சரத் பொன்சேகா கருத்து

(கொழும்பு)

எதிர்காலத்தில் என்னால் முன்னெடுக்கப்பட வுள்ள நடவடிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்ற ஆசீர்வாதமாகவே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பினை கருதுகிறேன் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடியுடன் சரணடையும் புலிகளின் தலைவர்களை சுடுமாறு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தலைமன்னாருக்கு மீள்குடியமர சென்ற குடும்பங்கள் அவதி

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகப் பகுதியில் மீள்குடியேற்றத்திற்காக புத்தளத்தில் இருந்து சென்ற சுமார் 600 குடும்பங்களைச் சேர்ந்த வர்கள், தங்களுக்கு அங்கு மீள்குடியேற முடி யாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக் கின்றனர்.

காணிகளுக்குள் செல்லக் கூடாது என பொலிஸார் தடுத்துள்ளதையடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கூறு கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் பெரும்பாலும் முஸ் லிம் குடும்பங்களும் அவற்றுடன் சில தமிழ் மற்றும் சிங்களக் குடும்பங்களும் வசித்து வந்தநிலையில், 1990 ஆம் ஆண்டுவிடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றிய போது, இந்தத் தமிழ், சிங்களக் குடும்பங்களும், *(19ஆம் பக்கம் பார்க்க)*

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலையில் கிரேனட்கள் மீட்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத் திலிருந்து ஐந்து கிரேனட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் புதிய கலை நிலையக் கட்டடத்தின் கூரையில் இவை மறைத்து வைக்கப்பட்டு இருந்தது.

மிரிஹான பொலிஸார் இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (பா-11)

# வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு சட்ட, நிறைவேற்று, நீதி அதிகாரங்கள் அவசியம்

## கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சட்ட, நிறைவேற்று, நீதி அதி காரங்கள் கையளிக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதாக கொழும்பு இணை யத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக விரிவாக ஆராய்வதற்காக அரசாங்கமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எதிர்வரும் டிசம்பர் 5ம், 6ம் மற்றும் 14ம், 15ம் திகதிகளில் கூடிப் பேசவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் அரசாங்கத்துடன் நடை பெறவுள்ள பேச்சு வார்த்தையின் போது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள், அதிகாரத்தைக் கையளிப்பதற்கான அலகு, ஆளுநர்களின் அதிகாரங்கள், அரசாங் கத்திடம் பாரப்படுத்தப்படவுள்ள அதிகாரங்கள் என்பவை உட்பட பல விடயங்கள் பேசப் படவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் *(20ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கலை பண்பாட்டுப் பெருவிழா நீர்வேலியில் இன்று இடம்பெறும்

(நீர்வேலி)

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்தும் கலை பண்பாட்டுப் பெருவிழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்றலில் இடம்பெறவுள்ளது.

யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் மன்றத் தலைவருமாகிய இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், திருமதி கிருபாகரி இளங் கோவன் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சி.கௌரிசங்கர், யாழ். மாவட்டச் செயலகக் கணக்காளர் ச.குகதாஸ், கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சதீஸ்வரன், வலிகாமம் கிழக்கு கலாசார உத்தியோகத்தர் அ.மிலாசினி ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

நீர்வேலிக் கிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் வகையில் திருநீர்வை என்ற மலரும் அழகொளிரும் நீர்வேலி என்ற இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. இதன் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆற்று வார். முதற் பிரதிகளை தொழிலதிபர் கனகரத் தினம் கிருபாகரன் பெற்றுக் கொள்வார். மலரின் பதிப்பாசிரியரும் விரிவுரையாள ருமாகிய ச.லலீசன் ஏற்புரை வழங்குவார். (ந)


SWISSTEK

டைல் மோட்டார்

ஃபுளோர் மற்றும் வோல் டைல்களைப் பதிப்பதற்கான நவீன உடனடிக் கலவை

சர்வதேச நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டது

சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.



ஆசிரியர் பதவி

தரம் 06-09 வரை

கணிதம், ஆங்கிலம், சைவசமயம், தமிழ்

ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் வேண்டிய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

-அதிபர்

The Express Institute

Irupalai Junction Kopay.


# மாநகரசபையின் பொதுக்கூட்டம்

யாழ். மாநகர சபையின் 2011 ஆம் ஆண் டுக்கான பதினோராவது மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு, முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலை மையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் மாநகர சபை உறுப் பினர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் ஆர். சத்தியானந்தன் கேட்டுள்ளார். (பா)

# கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையால் நடத்தப்படும் ஜே/95 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங் கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருமகள் சனசமூக நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்கு பற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப் பினை வழங்குமாறு யாழ். மாநகர சபை முதல் வர் திருமதி யோ. பற்குணராசா கேட்டுள்ளார். (பா)


முன்பள்ளி ஆசிரியர் தேவை

முன்பள்ளி பயிற்சி பெற்ற ஆங்கில அறிவுடன் கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை

உயர்ந்த சம்பளம் வழங்கப்படும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

- அதிபர்

KIDS GARDEN

The Express Institute

Irupalai Junction Kopay.


# யாழ்.முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துமாறு ஹக்கீம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்களின் மீள் குடியேற்றததைச் துரிதப்படுத்துமாறும் அவர்களின் காணி மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக கூடிய அக்கறை செலுத்து மாறும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை யாழ்.அரச அதிபரை சந்தித்த நீதியமைச்சர், முஸ்லிம்கள் எதிர்நோக்கு கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

யாழ். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களின் மீள்குடியேற்றத்திற்கும் காணிகள் தொடர்பான முரண்பாடுகளை தீர்த்து அவர்களின் புனர்வாழ்வில் அக்கறை செலுத்துமாறும் நீதி அமைச்சர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

யாழ்.முஸ்லிம்களின் வீடுகளில் கிணறு கள் இருப்பதாகவும் அதனைப் பயன்படுத் துவதற்கு யாழ்.மாநகரசபை அனுமதி வழங் கவில்லை எனவும் அவர் கூறினார்.

அவர்களின் பிரச்சினைகளில் முன்னு ரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் அமைச்சர் ஹக்கீம் கோரினார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மீண் டும் தங்களது சொந்த இடத்திற்கு வருகின் றார்கள்.

இந்நிலையில் அவர்களின் தேவைக ளையும் கவனத்தில் எடுக்குமாறு நீதியமைச் சர் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார். (பா-6)


நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடாத்தும்

கலை பண்பாட்டு விழா-2011

இடம் : சிவசங்கர பண்டிதர் அரங்கு,
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்றலில், நீர்வேலி.

காலம் : 19.11.2011 (இன்று) சனிக்கிழமை பி.ப. 01.30 மணி

தலைவர் : திரு. இ. குணநாதன் (தலைவர், கலை பண்பாட்டு மன்றம் நீர்வேலி)

பிரதம விருந்தினர்கள் : திரு.இ. இளங்கோவன் (செயலாளர்,கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)
திருமதி கிருபாகரி இளங்கோவன் (ஆசிரியர், கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க பாடசாலை)

சிறப்பு விருந்தினர்கள் : திரு.ம. பிரதீபன் (பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு,கோப்பாய்)
திரு. சி. கௌரிசங்கர் (வட பிராந்திய. முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி)
திரு.ச. குகதாஸ் (கணக்காளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
திரு. ச. சதீஸ்வரன் (விவசாய உதவிப் பணிப்பாளர், கிளிநொச்சி)
செல்வி அ. மிலாசினி (கலாசார உத்தியோகத்தர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்)



'திருநீர்வை' மலர் வெளியீடும்
'அழகொளிரும் நீர்வேலி' இறுவட்டு வெளியீடும்

முதற் பிரதி பெறுபவர் : திரு. க. கிருபாகரன் (உரிமையாளர், ஹரன் ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்)

வெளியீட்டுரை : பேராசிரியர் .தி. வேல்நம்பி
(பீடாதிபதி,முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் யாழ்.பல்கலைக்கழகம்)

ஏற்புரை : திரு.ச.லலீசன் (பதிப்பாசிரியர், திருநீர்வை)

சிறப்பு நிகழ்வுகள் :

- வீதியோட்டம் (காலை)
- கலை, நடன ஆற்றுகைகள்
- வசந்தன் கூத்து
- பண்பாட்டு ஊர்வலம்
- நீர்வைக் குரிசில் விருது வழங்கல்
- சத்தியவான் சாவித்திரி இசை நாடகம்

(சி-5001)

சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள் (எழுத்துப்பணி), திருமதி ருக்மணி ஆனந்தவேல் (பெண்கள் எழுச்சி), திரு. செல்லையா விஸ்வலிங்கம் (மரச் சிற்பம்), திரு. தர்மலிங்கம் பரராசசிங்கம் (பல்துறை), கந்தையா திருமுருகையா (ஆன்மிகப் பணி), திரு. வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம்

விளம்பர அனுசரணை :
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தைச் சூழவுள்ள அ...பணி நிறுவனங்கள்.


# வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயம டைந்த இளைஞர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டப்பிராய் விளையாட்டு அரங்கு வீதியை சேர்ந்த யோ. சஞ்ஜீவன் (வயது 21) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவர்.

கல்வியங்காடு ஜிம் உடற்பயிற்சி நிறுவனத் தில் வைத்து நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் பிரஸ் தாப இளைஞன் வாள்வெட்டுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (பா-11)

# அழகுக்கலை நிலையத்தினருக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட் பட்ட பகுதிகளில் இயங்கும் அழகுக்கலை நிலையங்கள் (BeautyParlour) நடத்தப்படும் முகவரி, நடத்துபவர்களின் பெயர் ஆகிய வற்றை உடனடியாக யாழ். மாநகர சபை சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தவறின் அவர்களின் மீது சட்ட நடவடிக் கை எடுக்கப்படுமென யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

(பா)


1 ஆவது பிறந்த தின வாழ்த்து



வற்றாப்பளையைச் சேர்ந்த
ந.புஸ்பராசா தங்கேஸ்வரி தம்பதியினரின்
செல்வப் புதல்வன் கஜிதன்
அவர்களின்
முதலாவது பிறந்தநாள் நிகழ்வு
அவரது வற்றாப்பளையில் உள்ள
மில் புஸ்பன் வீட்டில் நாளை 20-ம்
திகதி மாலை 4 மணிக்கு நடைபெறும்.
இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன்
வேண்டுகின்றோம்.

வற்றாப்பளை

ந.புஸ்பராசா
(மில் புஸ்பன்)

(சி-5004)

# இன்று ஒரு தகவல்

## போதும் என்கிற மனம்

ஒரு ஊரிலே ஒரு பெரிய மனிதன் இருந்தார்.

வசதியிலேதான் பெரிய மனிதனே தவிர குணத்திலே அப்படியில்லை. இன்னும் பெரிய மனிதனாக வரவேண்டும் என்பது அவரது நீண்டநாள் ஆசையாகும்.

அதனால் யாருக்கும் ஒரு ரூபாய் காசு கொடுக்கமாட்டார். மகா கஞ்சப் பிரபு.

அடுத்தவர்கள் நல்லபடியாக சந்தோஷமாக இருந்தால், அதை இவராலே தாங்கிக்கொள்ள முடியாது. பொறாமைப்படுவார்.

அவர் வீட்டுக்கு நேர் எதிரிலே ஒரு ஏழைக் குடும்பம் இருந்தது.

இவர் நல்லவர். மற்றவர்கள் கஷ்டப்பட்டால் அதைத் தாங்கிக் கொள்ளமாட்டார். தான் கஷ்டப்பட்டாலும் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறவர்.

ஒருநாள் சந்நியாசி ஒருவர் அந்த ஊருக்கு வந்தார்.

அந்தப் பெரிய மனிதன் வீட்டுக்கு முன்னால் போய் நின்று கதவைத் தட்டினார்.

கதவைத் தட்டிய சத்தம் உள்ளே இருந்த பெரிய மனிதன் காதிலே விழுந்தது. இருந்தாலும் அவர் கதவைத் திறக்கவில்லை.

கதவைத் திறந்தால் யாராவது ஏதாவது கேட்டு உள்ளே நுழைந்து விடுவார்கள். கொடுக்க வேண்டியிருக்கும்! அப்படியென்று நினைத்து விட்டு, தெரியாதபடி இருந்து விடுவார்.

சந்நியாசி சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு, கதவைத் திறக்காதபடியால், எதிர்வீட்டுக்குச் சென்றார்.

அதுதான்... அந்த ஏழை வீடு. வீட்டின் முன் கதவைத் தட்டினார். உடனே அந்த ஏழையும் அவரது மனைவியும் கதவைத் திறந்தார்கள்.

சந்நியாசியைப் பார்த்தார்கள் ''உள்ளே வரும்படியாக அழைத்தார்கள்.''

கதிரையிலே அமர வைத்தார்கள். உணவு சமைத்து கொடுத்தார்கள். சந்நியாசி திருப்தியாக சாப்பிட்டார்.

புறப்படும் சமயத்திலே அவர்களை பார்த்தார். ''எனக்கு மிகவும் திருப்திகரமான உணவளித்துள்ளீர்கள். உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். மூன்று வரம் கேளுங்கள் தருகிறேன்'' என்று சொன்னார்.

அதற்கு அவர்கள் ''உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி சுவாமி. இருந்தாலும் எங்களுக்கு வரம் எதுவும் தேவையில்லை. ஏனென்றால், நாங்கள் இரண்டு பேரும் மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம்'' என்றார்கள்.

''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' எனும் பொன் மொழி புரிந்தவர்கள் என்று மனதினுள் நினைத்துக்கொண்டு சந்நியாசி தனது பயணத்தை ஆரம்பித்தார். இருந்தாலும் அவரால் திருப்தி கரமாகப் போக முடியவில்லை.

இவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கவே வேண்டும் என்று முடிவு செய்தார். ஆசீர்வாதம் வழங்கினார். உடனே அந்த ஏழையின் வீடு ஒரு மாளிகையாக மாறியது. எல்லா வசதியும் வந்துவிட்டது.

மறுநாட்காலையிலே அந்தப் பெரிய மனிதன் தன் வீட்டுவாசல் கதவைத் திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம்.

எதிரில் இருந்த குடிசை வீடு மாளிகையாக காட்சியளித்தது. என்ன காரணம் என்று விசாரித்தார். விபரத்தை புரிந்து கொண்டார்.

உடனே தனது காரை எடுத்துக் கொண்டு சந்நியாசியைத் தேடி சென்றார்.

ஒரு மரத்தடிக்குள்ளே அவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டார். அவரது காலிலே போய்விழுந்தார்.

''இப்போது உனக்கு என்ன வேண்டும்'' என்று கேட்டார் சந்நியாசி.

''வேறு ஒன்றும் வேண்டாம். அந்த ஏழைக்கு கொடுப்பதாகக் கூறிய அந்த மூன்று வரங்களை மட்டும் எனக்கு கொடுத்தால் போதும்'' என்றார்.

''சரி! கொடுக்கிறேன்'' என்றார்.

வரத்தைப் பெற்றுக் கொண்டு அந்தப் பெரிய மனிதன் காரை எடுத்துக்கொண்டு மிகவும் உற்சாகத்தோடு புறப்பட்டார்.

வழியிலே ஒரு இடத்திலே சகதியில் கார் மாட்டிக் கொண்டது. இந்தக் கார் இருந்தாலும் ஒன்றுதான். எரிந்து போனாலும் ஒன்றுதான்! என்று நினைத்தார். அவ்வளவுதான். அவர் வாங்கின வரம் வேலை செய்ய ஆரம்பித்தது.

கார் அப்படியே தீப்பிடிச்சு எரிந்து சாம்பலாக போய்விட்டது. பெற்றமுதல் வரம் தீர்ந்தது.

''சரி... பரவாயில்லை. இன்னும் இரண்டு வரம் உள்ளது'' என்று நினைத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

உச்சி வெயில்! வியர்க்க விறுவிறுக்க நடந்து வந்து கொண்டிருந்தார். தாகம் வேறு! குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அவ்வேளையில் தனது மனைவியை நினைக்கிறார்.

''நான் இப்படி துன்பப்படுகிறேன். அவள் மட்டும் சந்தோஷமாக பங்களாவில் உட்கார்ந்திருப்பாள். என் கஷ்டம் அவளுக்கு என்ன தெரியும்? அந்த பங்களா தீப்பற்றி எரிந்தால்தான் என் கஷ்டம் என்ன என்பது அவளுக்குப் புரியும்'' என்று நினைத்தார்.

அவ்வளவுதான் இரண்டாவது வரமும் வேலை செய்து விட்டது. பங்களா பற்றி எரிந்துவிட்டது. மனைவிக்கோ தீக்காயம். அதை நேரில் பார்த்தார்.

''இப்படிப்பட்ட கஷ்டத்தை பார்ப்பதற்காகவா கடவுள் கண்ணை கொடுத்தார்? இந்தக் கண் இருந்து என்ன பிரயோசனம்?'' என்று நினைத்தார்.

அவ்வளவுதான் மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்தது.

பார்வையையும் இழந்தார்.

வரம் வாங்கியும் அது அந்தப் பெரிய மனிதனுக்கு நல்ல விதமாகப் பயன்படவில்லை. அதற்கு என்ன காரணம்?

பொறாமை- சுயநலம்- முற்கோபம் எல்லாம்தான்! இந்த மூன்று குணமும் இருந்தால் அடுத்தவர்கள் நல்லது செய்தாலும் அது நமக்கு நல்லவிதமாக அமையாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உதவும் கரங்கள் அமைப்பினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்

(மல்லாவி)

உதவும் கரங்கள் என்ற அமைப்பினால் போரினால் பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த மற்றும் அங்கவீனரான 900 மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வுதவியானது லண்டனில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளினால் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் மேற்குறித்த அமைப்பானது, கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி போரின் போது குடும்பத் தலைவர்களை இழந்த விதவை பெண்களுக்கும் மற்றும் படுகாயமடைந்தவர்களுக்கும் 27 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 நீர் இறைக்கும் இயந்திரங்களினை வழங்கவுள்ளனர்.

இதன் அடிப்படையில் கற்சிலைமடு கிராம த்தில் 6 இயந்திரங்களும் தச்சடம்பன் கிராமத்திற்கு ஒரு இயந்திரமும் கருனாட்டுக் கேணி கிராமத்தில் ஒரு இயந்திரமும் முள்ளியவளை கிராமத்திற்குநான்கு இயந்திரமும் என்ற அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அதே அமைப்பினால் வள்ளிபுனம் கிராமத்தில் இயங்கும் செவிப்புலன் அற்ற சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள 65 மாணவர்களுக்கு கடந்த 13 ஆம் திகதி மதிய போசன உணவினையும் வழங்கி மகிழ்வித்து அவர்களை உற்சாகப்படுத்தி உள்ளனர். (அ-3-15)

## முல்லையின் அரச அதிபர் வெற்றிக்கிண்ண போட்டி

முல்லை. மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் முல்லை. மாவட்ட தபாற்திணைக்கள அணியும் முல்லை. பிராந்திய சுகாதார திணைக்கள அணியும் இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகியுள்ளன.

மேற்குறித்த உதைபந்தாட்ட போட்டியானது, கடந்த 14 ஆம் திகதி மு/வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 11 அணிகள் மோதிக் கொண்டன. முதற் சுற்றில் களமிறங்கிய முல்லை. தபாற் திணைக்கள அணியுடன் முல்லை. உள்ளூராட்சி திணைக்கள அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் முல்லை. தபாற் திணைக்கள அணி வெற்றியீட்டியது.

இதேபோன்று இன்னுமோர் சுற்றில் களமிறங்கிய முல்லை. பிராந்திய சுகாதார திணைக்கள அணியுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் முல்லை. பிராந்திய சுகாதார திணைக்கள அணி வெற்றியீட்டியது. (அ-3-15)

## நிர்வாகசபை தெரிவு

வளர்மதி சனசமூக நிலையத்தின் எதிர்வரும் ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் தலைவர் பொ. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக க. வல்லிபுரம், செயலாளராக பொ. காந்தராசா, பொருளாளராக வே.மதன், உபதலைவராக சி.நடேசன் , உப செயலாளராக க.பரமேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் ஒன்பது நிர்வாகக் குழு உறுப்பினர்களும் சனசமூக நிலைய போஷகராக முன்னாள் தலைவர் பொ. தம்பிமுத்துவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 370 | 230 |
| தக்காளி | 110 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 50 |
| கரட் | 100 | 140 | 100 |
| பூசணி | 60 | 60 | 40 |
| புடோல் | 50 | 100 | 70 |
| வாழைக்காய் | 35 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 60 |
| பாகற்காய் | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 25 | 30 | 35 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 90 |
| பயற்றங்காய் | 70 | 50 | 130 |
| லீக்ஸ் | 50 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 50 | 30 |
| கறிமிளகாய் | 80 | 160 | 110 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 50 |
| போஞ்சி | 60 | 140 | 230 |
| கத்தரிதம்புள்ள | 70 | 30 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 150 | 230 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 |

## இராசி பலன்

*19.11.2011*
*(கார்த்திகை 03, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*நவமி பின்னிரவு 1.55 மணிவரை*
*மகம் பிற்பகல் 1.03 மணிவரை*
*இராகுகாலம் 9.09-10.39 மணிவரை*
*சுபநேரம் 3.09-4.39 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

**மேடம்** இனிமையான நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து செயற்படுவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுவாரஸ்யமான நாள், பிரயாணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரிக்கும், பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைவாக காணப்படும்,சுப விரயங்கள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவுண்டு, உறவினர் வருகையுண்டு.

**துலாம்** நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும்,தொட்ட காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், குறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறைவடையும்.

**மகரம்** பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, கணவன்-மனைவியிடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறையும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், போசன சுகமுண்டு.

வளவன்

# உயர் தொழில்நுட்பக்கல்லூரியில் இரு கற்கை நெறிகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் அடுத்த வருடம் இரண்டு புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான பயிற்சிப்பட்டறைகள் அமைப்பதற்கு தேவையான இட வசதி இல்லாமையால் காணியை இலவசமாக வழங்குவதற்கு யாழ். சமூகத்திலுள்ள நன்கொடையாளர்கள் முன்வர வேண்டும் என யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரிச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குருநகரிலுள்ள யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதே உயர் தொழில்நுட்ப கல்லூரிச் சமூகம் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE), உயர் தேசிய முகாமைத்துவ சுற்றுலாத்துறை (HNDTM) ஆகிய இரண்டு கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இவ்விரண்டு கற்கை நெறிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலேயே யாழ்ப்பாணத்தில் மட்டுமே ஆரம்பிக்கப்படவிருகின்றது. இதனால் எமது மாணவர்கள் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை பெறமுடியும்.

இக்கற்கை நெறிகள் புதுவ,மட்டக்குளி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

இதனால் எமது தமிழ் மாணவர்கள் அங்கு சென்று இக்கற்கை நெறிகளை தொடர வேண்டியுள்ளதனால் பெரும் செலவுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எமது கல்லூரியில் இப்பொழுது ஆயிரத்து 243 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மேலும் புதிதாக 700 மாணவர்களை இணைக்கவுள்ளோம்.

இவ்விரு கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு 50 மாணவர்கள் தேவை என்பதனால் மாணவர்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு தமது விண்ணப்பங்களை கையளிக்குமாறும் இதில் அதிகளவான மாணவர்கள் இணையாவிட்டால் இவ்விரு கற்கை நெறிகளும் வேறு மாவட்டங்களிற்கு தெரிவு செய்யப்படும் எனவும் இக்கற்கை நெறிகள் 100 வீதம் தொழில்வாய்ப்பை கொண்டதும் மொரட்டுவ பல்கலைப்பட்டத்திற்கு இணையானது என்றும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பணிப்பாளர், துறைத் தலைவர்கள், பதிவாளர்கள், கணக்காய்வாளர்கள், பழையமாணவர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (அ)

## பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் பொ. இரட்ணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை திருமதி நற்குணலிங்கம் மனோகரி வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-3-24)

* * * * * *

(கரவெட்டி)

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வேலாயுதம் மகா வித்தியாலய பிரதி அதிபர் கி. குகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை திருமதி குகநாதன் இந்துமதி வழங்கி கௌரவிக்கவுள்ளார்.(அ-3-24)

## உதவிப் பணம் பெறுவோருக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் புற்று நோய் உதவிப் பணம், தொழுநோய் உதவிப் பணம் பெற்றுக் கொள்வோர் தங்கள் குடும்ப பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை, நோய்க் கொடுப்பனவு அட்டை என்பவற்றுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவைகள் பிரிவிற்கு தாமதமின்றி சமுக்மளிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணி சம்பியனானது

(கரவெட்டி)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்தின் இருபத்துக்கு இருபது கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை வதிரி டயமன்ஸ் அணியை தோற்கடித்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனாக்கியது.

இவ்இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நவஜீவன்ஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி டயமன்ஸ் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. 91 ஓட்டங்களால் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனாகியது.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் நிருசாந், தொடர் நாயகனாக டயமன்ஸ் அணியின் சுரேந்திரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-24)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி இந்து இளைஞர் மன்ற பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இள்ளஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும் என சங்கத் தலைவர் த.தியாகலிங்கம் அறிவித்துள்ளர். (அ)

* * * * * *

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் லயன் க.தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வெள்ளி விழா செயற்பாடுகள் பற்றி ஆராய்தல், இச்சங்கம் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடம் கிடைத்தமை பற்றி தெரியப்படுத்தல், மேலும் இச்சங்கத்திற்கு வாகனம் கொள்வனவு பற்றி கலந்துரையாடல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இடம் பெறவுள்ளன. (அ-3-10)

## ரூபவாஹினி அணி உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் ரூபவாஹினி கரப்பந்தாட்ட அணி உருவாக்கப்படவுள்ளது.

இவ்வணிக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து வீர, வீராங்கனைகளை உள்வாங்கும் பொருட்டு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் அணிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு வீர, வீராங்கனைகள் தமது விண்ணப்பங்களை உதவி இயக்குநர், தேசிய, இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார். (அ)

# கட்டடத் திறப்பு விழா

(கரவெட்டி)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் கட்டட திறப்புவிழா இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு மாலுசந்தியில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தலைவர் பா. இராகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.




இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

விசேட அதிதிகளாக நோர்வே நாட்டின் போரூட் பொதுச் செயலாளர் மோட்டின் லோன்ஸ்ற்ற், இலங்கை போரூட் பணிப்பாளர் எம்.எஸ்.மாரிகர், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-24)

# 19 பயனாளிகளுக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தற்செயல் நிவாரண கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த பயனாளிகளில் 19 பயனாளிகள் சமூக சேவைகள் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் சு.நடராஜா (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி), து.சசிகலா (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), பொ. புஸ்பகரன் (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), செ.சௌந்தரராஜா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்),வி.கவிதா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), க.ஸ்ரீஸ்கந்தராஜா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), மு.சரஸ்வதி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்),ச.கணேசு (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), து.லிங்கராஜா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), த.சிவகரன் (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), சூ.லோகேஸ்வரன் (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), மு.லோகேஸ்வரன் (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), சி.செல்வரதி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), த.சிவக்கொழுந்து (சிவன்கோவிலடி, சாவகச்சேரி), சி.முருகானந்தன் (மந்துவில் வடக்கு, கொடிகாமம்), ப.விஜிதா (கச்சாய் தெற்கு, கொடிகாமம்),மா.ஈஸ்வரி (பாலாவி தெற்கு, கொடிகாமம்), ஜெ.சாந்தி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), ச.ஜெயக்குமாரி (வரணி, இயற்றாலை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவைகள் பிரிவிற்கு ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# வாசிப்பு மாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையும், கச்சாய் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையும் இணைந்து நடாத்தும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் திணைக்கள உதவிச் செயலாளர் திருமதி நளாயினி இன்பராஜ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், நெல்சிப் திட்டப் பொறியியலாளர் ந.இராஜவரதன், சாவகச்சேரி பிரதேச சபை செயலர் தி.தர்சினி, சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு நிர்வாக உத்தியோகத்தர் வே.சிவராஜலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியால அதிபர் வ.நடராசா, கொடிகாமம் மத்தி கிராம சேவகர் இ.சுபாஸ்சந்திரபோஸ், கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபர் வி.கணபதிப்பிள்ளை, கொடிகாமக் பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.பி.சந்திரசேகரா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கெள்ளவுள்ளனர். (அ)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம், இரண்டாம் வருட கல்விமாணி மாணவர்களுக்கான கற்கைநெறி விரிவுரைகள் . இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (அ)

# இந்தியா, இலங்கைக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பு அவசியம்

## இந்திய முன்னாள் வெளிவிவகார செயலாளர்

(கொழும்பு)

இந்த துறைமுகங்கள் அம்பாந்தோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துறை முகத்திற்கோ இலங்கையின் ஏனைய துறை முகங்களுக்கோ அச்சுறுத்தல் இல்லை என இந்திய முன்னாள் வெளி விவகார செயலர் ஷியாம்சரண் நேற்று முன்தினம் கொழு ம்பில் தெரிவித்தார்.

இந்திய- இலங்கை மன்றமும் சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையமும் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

எதிர்காலத்தில்கப்பல்துறைஅபிவிருத்தி மிகப்பாரியதாக இருக்கும் என்பதால் இந்தியாவினதோ இலங்கையினதோ துறைமுகங்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது எனவும் அவர் கூறினார். அம்பாந்தோட்டை துறை முகமோ எதிர்காலத்தில் வட பகுதியில் அமைக் கப்படக்கூடிய துறைமுகமோ எதிர்காலத்திற்கு போதுமானதாக இருக்கமாட்டாது என அவர் தெரிவித்தார்.

எனினும் ஆம்பாந்தோட்டை துறை முகம் மற்றும் வடக்கிலுள்ள துறை முகம் என்பன முறையாக பயன்படுத்தப்பட்டால் இலங்கை நன்மைகளைபெறமுடியும்எனஅவர்கூறினார்.

இலங்கை- இந்தியாவுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட வேண்டும்எனக்கூறிய ஷியாம் சரண் இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றையும் சுட்டிக்காட்டினார்.

உற்பத்தித் துறையில் சீனா கவனம் செலு த்துகையில் சேவைத்துறையில் சீனாவைவிட இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, இந்திய உயர்ஸ்தானிகர் அஷோக் கே காந்தா உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். (அ)

# மாமனாரை கொலை செய்த மருமகன் தற்கொலை

(கொழும்பு)

களுத்துறை தீனியாவல பகுதியில் தமது மாமனாரை கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் தமது மனைவியின் வீட்டுக்கு சென்றுள்ள குறித்த நபர் மாமனாரை கொலை செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

பின்னர் மனைவியின் சந்கோதரன் மீதும் அவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இதன்போது கடுங்காயங்களுக்கு உள்ளான மனைவியின் சகோதரன் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலை மேற்கொண்ட நபர் பின்னர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பிரேத பரிசோதனைகள் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டார். (அ-2)

# தார் இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக தார் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ துறை முகங்கள் மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் என்ற வகையில் இதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

நாட்டில் அபிவிருத்தி திட்டங்கள் பெருமளவில் மேற்கொள்ளப்படுவதால் வீதி அபிவிருத்திக்கான தார் தேவை அதிகரித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் போதியளவு தாரை விநியோகிக்க முடியாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாகவும் தார் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் மின் அழுத்த மின் விநியோ மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டி இருப்பதனால் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கீழ் வரும் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்பகுதிகள் வருமாறு, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு,நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில்மின் விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# பாதாள உலகக் குழுவில் அங்கம் வகிக்கும் இராணுவத்தினரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களில் அங்கம் வகிக்கும் 500 இராணுவ உத்தியோகத்தர்களை கைதுசெய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் சுமார் 500 இற்கும் அதிகமான படையினர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுக்களில் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொலை, கொள்ளை உள்ளிட்ட பாரிய குற்றச் செளல்களுடன் தொடர்புடைய 25 பேர் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடிய நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றுள்ள 60 ஆயிரம் படைவீரர்களில் 55 ஆயிரம் பேரை சட்ட ரீதியாக இராணுவ சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

பாதுகாப்பு அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 5 நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 5 நபர்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார்.

* * * * *

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 2 நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு ஒரு நபருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் மற்றையவருக்கு 4 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார்.

* * * * *

20 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ்.மதுவரி பரிசோதகரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார். (அ-3)

# காங்கேசன்துறையை யாழ்தேவி 2013 ஆம் ஆண்டில் வந்தடையும்

## அமைச்சர் குமாரவெல்கம

(கொழும்பு)

வடபகுதிக்கான யாழ்தேவி எதிர் வரும் 2013 ஆம் ஆண்டு காங்கேசன்துறையை அடையும் என போக்குவரத்து அமைச்சர்குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பலாலிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரப்பாதை இந்திய நிறுவனத்தினால் இன்னும் இருவருடங்களில் நிர்மாணிக்கப் பட்டவுடன் காங்கேசன்துறைக்கு யாழ்தேவி செல்லும் என அவர் கூறினார்.

பலாலிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரதப் பாதை அமைப்பதற்கான ஒப்பந்தம் இலங்கை புகையிரதத் திணைக்களத்துக்கும் இந்தியாவின் இர்கோன் நிறுவனத்துக்கும் இடையில் கொழும்பில் கைச்சாத்திட்டப்பட்டது.

அமைச்சர் வெல்கம மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அஷோக் கே. காந்தா ஆகியோரும் இவ்வைபவத்தில் பங்கு பற்றினர்.

56 கிலோ மீற்றர் நீளமான இந்த புகையிரதப் பாதை 149 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்திய கடனுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் அஷோக் கே காந்தா உரையாற்றுகையில்,

வடபகுதி ரயில் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக கூறினார். இலங்கையின் அபிவிருத்தியில் முக்கிய பங்குவகிக்கும் இந்தியா, இலங்கையில் ஏராளமான அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார்.

106 கிலோ மீற்றர் நீளமான மதவாச்சி- தலைமன்னார் புகையிரப் பாதை மற்றும் 90 கிலோ மீற்றர் நீளமான ஓமந்தை-பலாலி புகையிரத பாதை ஆகியனவும் இவற்றில் அடங்கும் என அவர் தெரிவித்தார். (அ-2)


சரவணா ரெக்ஸின்



(குட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணத்தில்)
2ஆவது கிளையானது 2ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்றது
என்றும், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரினதும் ஆதரவு பெற்று சிறப்புடன் இயங்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
சரவணா ரெக்ஸ்
வாடிக்கையாளர்கள்.
(சி-3002)



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்-2011

காலம் :- 19.11.2011 சனிக்கிழமை காலை 8.30 மணி
இடம் :- ஒறேற்றர் மண்டபம்
தலைவர் :- கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் P. புவனராஜன் அவர்கள்
(தலைவர், லண்டன் பழைய மாணவர் சங்கம்)
நிறுவுனர் நினைவுப் பேருரை
சிறப்பு விருந்தினர்
திருமிகு N.கருணை ஆனந்தன் அவர்கள் (J.P)
(கணக்காளர், கணக்கியல் ஆலோசகர்)
ஆசியுரை
திருமிகு K. சிவாஜி அவர்கள்
(முன்னாள் அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
பரிசில் வழங்கல்
திருமதி ஞானரஞ்சினி புவனராஜன் அவர்கள் (SLEAS)
(ஒறேற்றர் குடும்ப உறுப்பினர், ஓய்வு பெற்ற அதிபர், கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி)
நன்றியுரை
திரு.த.தவராஜா அவர்கள்
(பிரதி அதிபர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை 021 2240230
அதிபர், ஆசிரியர்கள். மாணவர்கள்.
(6824)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான உறவை சீர்குலைக்கமாட்டேன்

## பிரபா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாநகரசபை உறுப்பினருமான மனோகணேசன் அவருக்கு எதிராக அவரது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற நானும் மேலும் இரண்டு தமிழ் அரசியல்வாதிகளும் அவருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாக கூறியிருப்பது பிழையான கருத்தாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சம்பந்தமான செய்தியை சிங்களப் பத்திரிகைகளுக்கு வழங்கியது நானே என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, மனோகணேசனுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ள உறவை சீர்குலைக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.

அதேபோல் வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் இதனைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. இந்தச் செய்தியை நான் வழங்கியிருந்தாலும் கூட மனோகணேசன் பெயரில் தவறுதலாக வெளியிட்டதாக பத்திரிகையின் நிருபர் எனக்கு அறியத்தந்துள்ளார்.

பல வைபவங்களில் எனது பெயரையும் மனோகணேசன் அவர்களுடைய பெயர்களையும் மாற்றியழைப்பது சகயமான விடயமாகும் என்பதை பலரும் அறிவார்கள். இப்படியான ஒரு தவறே சிங்கள நாளேட்டில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பத்திரிகையின் தவறுக்கு நான் மறுப்பும் தெரிவித்துள்ளேன்.

ஆனால், இப்படியான ஒரு பத்திரிகை நிருபரின் தவறை கூட தனது அரசியல் விளம்பரத்திற்கு ஆதாயம் தேடுவதற்கு இவர் முற்பட்டிருப்பது வேதனையாக இருக்கிறது. அதற்கு மேல் சென்று மேலும் இரண்டு அரசியல் வாதிகளின் பெயரை சொல்லாமல் அவருக்கு எதிராக சதி செய்கிறார்கள் என்று கூறியிருப்பது அவரது அறியாமையை எடுத்துக் காட்டுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் எனக்கும் ஏனைய அரசியல்வாதிகளுக்கும் எமது மக்களுக்கான பணிகளை செய்தவற்கே நேரம் போதாமல் இருக்கின்றது.

அரசியல் அறிக்கைகள் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் அவசியம் எனக்கோ அல்லது வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினருக்கோ இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு நான் என்றும் எதிரானவன் அல்ல.

அதேபோல் வடக்கு-கிழக்கு மக்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் அக்கறையாக உள்ளேன். அதேசமயம் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற பதத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வில் இந்திய வம்சாவளி தலைவர்களையும் முஸ்லிம் தரப்பினரையும் இணைத்துக் கொள்ளாமல் செயற்படுவதையே நான் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றேன். வடக்கு-கிழக்கு மக்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்கு தமிழ் கூட்டமைப்பினரை விட ஒருபடி மேலே சென்று அரசாங்கத்திற்குள் தனது எதிர்ப்பை தெரிவித்தி வருகின்றேன். (அ-2)

# மீனவக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் திட்டத்திற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள கடற்றொழிலாளர் ஏனைய நாட்டு கடற்றொழிலாளர்களை விட கூடிய வரப்பிரசாதங்களைப் பெறுகின்றனர் என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜிதசேனரத்ன தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் 200 கடற்றொழிலாளர்களுக்கு தொண்ணூறு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கும் நிகழ்வு சிலாபம் சுதசுன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடலில் மீன் பிடிக்கும் போது எதிர் கொள்ளும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இவ் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை, மீனவக் குடும்ப பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் திட்டங்களும் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதிய திட்டமும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-2)

# பல்கலையில் பகிடிவதையில் ஈடுபட்ட 64 மாணவர்களுக்கு வகுப்புத்தடை

## எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் நான்கு பேரை பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் பேரில் 64 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராக குறித்த பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.


குறித்த மாணவர்களை உடனடியாக கல்வி நடவடிக்கையில் உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்து நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் சம்மாந்துறையிலுள்ள பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முதலாம் வருடத்திற்காக புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

புதிய முதலாம் வருடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள மாணவர்கள் தங்கியுள்ள விடுதிக்கு சென்ற இரண்டாம் வருட மாணவர்கள் சிலர் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கிய அநாமதேய தகவலையடுத்தே இந்த வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாணவ பிரதிநிதிகள் தெரிவித்தனர். குறித்த முறைப்பாடு தொடர்பாக எந்தவித விசாரணைகளையும் நடத்தாமலேயே பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களை இடை நிறுத்தியுள்ளனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அடுத்த மாதம் பரீட்சை நடைபெறவுள்ள நிலையிலேயே இம் மாணவர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாணவ பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர். (அ-2)

# மரண அறிவித்தல்

## கந்தையா இராசையா



துரைவீதி- கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், சுன்னாகம் விநாயகர் அரிசி ஆலையின் உரிமையாளரும், K.R.S நிறுவனத்தின் ஸ்தாபகரும் இல, 35/2, எலிபாங் வீதி, கொழும்பு-05 ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா அவர்கள் 16.11.2011 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா- செல்லாச்சி தம்பதியினரின் அருமை மகனும், இளையதம்பி-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், பூமணி, சிவலோகநாதன் (Rasam Rice Mill, K.R.S. Food Products, K.R. Sivaloganathan & Co.), சச்சிதானந்தம் (Canada), இராணி, இலக்சுமிதேவி, கையிலாயபிள்ளை (சிறீ -International Marketing Center, Hitech Marketing K.R.S. Trades Center), சிவஞானசுந்தரம் (சிவா - Internationnal Marketing Center, K.R. Sivaloganathan & Co.), விக்கினேஸ்வரன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற சபா, சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய வெளிநாட்டு தொலைத்தொடர்பு அத்தியட்சர் ), Dr. மகாதேவன் (யாழ். போதனா வைத்தியசாலை), தேவராஜா (பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), இராஜதேவி, ஹேமலதா (கனடா), பாமதி, அமுதா, தசிந்தா (லண்டன்), கலாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை (நாளை) கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் (35/2, எலிபாங் வீதி, கொழும்பு -05) காலை 8.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தகனத்திற்காக அவரது பூதவுடல் 10.00 மணியளவில் பொரளையிலுள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

35/2, எலிபாங் வீதி,
கொழும்பு-05.
T.P.:-2582783, 0777808822

தகவல்:- சிறீ

(சி-4997)

# ரணில் கட்சி யாப்பை மீறி செயற்படுவதாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கட்சியின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக செயற்படுவதுடன் கட்சியின் யாப்பையும் மீறி செயற்படுவதாக நேற்று முன்தினம் குற்றப் பத்திரிகையொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐ.தே.க. வின் தென்மாகாண சபை உறுப்பினர், சட்டத்தரணி மைத்திரி குணரத்னவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பத்திரிகை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இந்த குற்றப்பத்திரிகையில் 20 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த விடயங்களிலும் தலைமைத்துவம் கட்சியின் யாப்பை மீறியுள்ளதாக முறைப்பாட்டாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சியின் யாப்பை ரணில் விக்ரமசிங்க மீறியுள்ள சந்தர்ப்பங்களை ஒவ்வொன்றாக சுட்டிக்காட்டியுள்ள அவர் குற்றச்சாட்டுக்களுக்கு சாட்சியாளர்களாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரை உள்ளடக்கியுள்ளார்.

அனைத்து குற்றச்சாட்டுக்களையும் அவர் சாட்சியங்களுடன் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். கட்சியில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காகவும் தலைமைத்துவத்தில் மாற்றம் ஒன்று அவசியம் எனவும் முன்னின்று கருத்துக்களை வெளியிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை அவர் தனது முதலாவது குற்றச்சாட்டாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்காக குரல்கொடுத்த செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களின் செயற்குழு உறுப்புரிமையை இரத்து செய்யும் வகையிலும் தொகுதி அமைப்பாளர் பதவியை நீக்கும் வகையிலும் கட்சியின் உறுப்புரிமையை இரத்து செய்யும் வகையிலும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றப்பத்திரிகையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பிரபல்யமான செயற்பாட்டாளர்களுக்கு தேர்தல்களின் போது வேட்பு மனுக்கள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்காக உறுப்பினர்களை நியமிக்கும் போது தகுதியானவர்கள் இருக்கும் நிலையில் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படாத சிலருக்கு அந்தப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சியின் யாப்பிற்கு அமைவாக தலைமைத்துவத்திற்காக போட்டியிட முயற்சித்த சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிக்குப் போட்டியிடத் தயாரான ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு பகிரங்கமான ஒத்துழைப்பு வழங்கிய ரோசி சேனநாயக்க, புத்திக பத்திரன, இம்தியாஸ் பாகிர் மாகார் மற்றும் சந்திரா கன்கந்த ஆகியோரின் செயற்குழு உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டமையும் தலைமைத்துவத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் உள்ளடங்கியுள்ளன.

அத்துடன் 30 வருடகாலமாக நாட்டில் நிலவிய யுத்தம் நிறைவடைந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் பிள்ளைகள் யுத்த களத்தில் போராடிய சந்தர்ப்பத்திலும் நாட்டிற்கு யுத்த வெற்றி அவசியம் என அனைவரும் பிரார்த்தித்த சந்தர்ப்பத்திலும் ரணில் விக்ரமசிங்க அதற்கு ஒத்துழைப்பு வழங்காமை தொடர்பாகவும் இந்த குற்றப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனைய உறுப்பினர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளைப் போன்று இந்தக் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 20 விடயங்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கட்சியின் பொதுச் செயலாளரிடம் வேண்டியுள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/79 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இக் கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேட்டுள்ளார். (எ)

## சிகரெட்டுகளை கடத்தியவர் கைது

(கொழும்பு)

கட்டாரிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த 30 ஆயிரத்து 600 சிகரெட்டுக்கள் அடங்கிய 153 சிகரெட் பெட்டிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டாரிலிருந்து நேற்று அதிகாலை இலங்கை வந்த விமானத்திலே குறித்த சந்தேக நபர் இந்த சிகரெட்டுக்களைக் கொண்டு வந்துள்ளார். இச்சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி ரூபா 6 இலட்சத்து 12 ஆயிரம் என கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பணிப்பாளர் பிரதி ராஜ்மோகன் தெரிவித்தார். (அ-2)

# மன்னாரில் மீனவர்களின் அமைதிப் பேரணிக்கு தீர்வு

(கொழும்பு)

அமைச்சு மட்டத்தில் இருந்து கிடைக்கப் பெற்றிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கின்றார்.

மன்னாரில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மீனவர்களின் அமைதிப் பேரணிக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டு இருப்பதாக மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கின்றார்.

மன்னாரில் நேற்று காலை மீனவர்கள் ஒரு சில கோரிக்கையினை முன்வைத்து அமைதிப் பேரணி ஒன்றினை நடத்தியிருந்தனர்.

மன்னார் நகரம், பள்ளிமுனை மற்றும் பனங்கட்டு கொட்டு மீனவர்கள் மேற்கொண்டு வரும் ஒருசில கடற்றொழில் முயற்சிகளுக்கு கடற்றொழில் திணைக்களம் கட்டுப்பாடுகளை விதித்திருந்ததாக தெரிவித்தே மேற்படி பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

பேரணியாக மன்னார் மாவட்ட செயலகத்தை நோக்கிச் சென்றவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கான மகஜரினை மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்திருந்தனர்.

மேற்குறித்த மகஜரில் தமது ஜீவனோபாயமான கடற்றொழில் முயற்சிகள் சிலவற்றிற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருப்பதாகவும் ஆயினும் வெளிமாவட்ட மீனவர்கள் அதனை எவ்வித தடைகளும் இன்றி முன்னெடுத்து வருவதாகவும் அதனால் தமக்கும் அவ்வனுமதியினை வழங்க வேண்டும் என அம் மகஜரில் தெரிவித்திருக்கின்றனர்.

மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்திய மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துரையாடல் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார்.

மன்னாருக்கு புதிதாக நியமனம் பெற்ற அரசாங்க அதிபர் ஜே.ஏ.சரத் ரவீந்திர தலைமையில் அவரது அலுவலகத்தில் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் அதிமேதகு மன்னார் ஆயர் இராயேப்பு ஜோசேப்பு ஆண்டகை, மன்னார் மாவட்ட கடற்றொழில் பணிப்பாளர் மிராண்டா மற்றும் மீனவர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் மீனவர்கள் முன்னெடுத்து வரும் குறித்த தொழில் முயற்சிக்கான அனுமதி அமைச்சு மட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்றிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கின்றார். (அ-2)

# விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தை அடுத்த மாதம் வழங்க நடவடிக்கை

## விவசாய காப்புறுதி சபை தெரிவிப்பு

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு நிதி அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக சபையின் தலைவர் சுமனா ஆரியதாஸ் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த மாதம் முதல் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார். நாடு முழுவதும் விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்ட 95 ஆயிரம் விவசாயிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு விவசாயிக்கு குறைந்த பட்சம் ஆயிரம் ரூபா வீதம் ஓய்வுதியம் வழங்கப்படும் என்று கமநல மற்றும் விவசாய காப்புறுதி சபையின் தலைவர் சுமனா ஆரியதாஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொன்சேகாவின் தலைமையில் அரசியல் அமைப்பு ஏற்படுத்த முடிவு

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையில் விரிவான அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து எதிர்க்கட்சிகள் இடையில் பேர்ச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும்,அங்கம் வகிக்காத பல அரசியல் கட்சிகள் இதில் இணைந்துள்ளதாக அரசியல் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக நடக்கும் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஐக்கியதேசியக் கட்சியின் மூன்று முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். உத்தேச அரசியல் அமைப்பை உருவாக்குதல் அதன் நோக்கம் என்பற்றை மக்களுக்கு தெளிவுபடுத்த நாடு முழுவதும் கருத்தரங்குகளும் கூட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

அதேவேளை இந்த அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அதில் ஆளும் கட்சியை சேர்ந்த சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# சொத்துக்களை தேசியமயப்படுத்தும் திட்டத்தில் மேற்குலகம் கவனம்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தயா கமகே மற்றும் ஹரி ஜயவர்த்தன உள்ளிட்ட உள்நாட்டு வத்தகர்களை பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

சர்வதேச ஜனநாயக சங்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய தலைவராக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் இலங்கை திரும்பினார்.

வினைத்திறனாக இயங்காத சொத்துக்களை தேசியமயப்படுத்தும் சட்டம் குறித்து உலகத் தலைவர்கள் கவனம் செலுத்தி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களை தேசிய மயப்படுத்தும் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப் பட்டது.

லண்டனிலிருந்து நாடு திரும்பிய எதிர்க் கட்சித் தலைவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சொத்துக்களை தேசியமயப்படுத்தும் சட்டம் குறித்து பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் பாராளுமன்றம் ஆகியன இலங்கை எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகர்களான தயாகமமே மற்றும் ஹரி ஜயவர்த்தன உள்ளிட்ட உள்நாட்டு வர்த்தகர்களை பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### வாழையில் தண்டமுகல்

வாழைத் தண்டமுகல் என்பது ஒரு வகை பூஞ்சணத்தினால் ஏற்படுத்தப்படும் நோயாகும். யாழ்ப்பாணத்தில் வாழை பயிரிடப்படும் பல பிரதேசங்களில் இந்நோயினது அறிகுறிகளை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எமது பிரதேசத்தில் புதிதாக வருகை தந்த வாழை நோய்களுக்குள் இதுவும் ஒன்று. பூஞ்சண நோயென்பதாலும் வாழை பயிரிடப்படும் நிலம் குளிர்மையாக இருப்பதாலும் பூஞ்சணத்தினுடைய தொற்று ஏற்பட்டவுடன் அது பரவி விருத்தியடைய ஆரம்பித்துவிடும்.

பல்வேறு நோய்கள் வாழையைத் தாக்குவதனாலும் இந்நோய்களுக்கான மூலகாரணி வேறு வேறு நுண்ணங்கிகளாக இருப்பதாலும் நோய்பற்றிய தெளிவான அறிவு இருத்தல் அதனை முகாமைப்படுத்த ஏதுவாகும். அண்மைக் காலத்தில் பரவலாக வாழைச் செய்கை பண்ணப்படும் இடங்களில் இந்நோயின் தாக்கத்தை அவதானித்ததாலும் எங்களுருக்கு புதியதொரு நோயாக இருந்ததனாலும் இந்நோய் பற்றிய அறிகுறிகள் இதற்கான விருந்து வழங்கிகள் மற்றும் இந்நோயை முகாமைத்துவப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் விவசாய உயிரியல் துறையில் செய்யப்பட்ட ஆய்வின் முடிவுகளை தொகுத்து தருவது பொருத்தமாக இருக்கும்.

### தண்டமுகலை தோற்றும் பூஞ்சணம்

வாழையில் தண்டமுகலை தோற்றுவிக்கும் பூஞ்சணம் ஓர் மண் வாழ் பூஞ்சணம் என்பதற்கு மேலாக வளியினூடாக வித்தி மூலம் பரவுந்தன்மை கொண்டிருப்பதுடன் ஒருவித்திலை தாவரங்கள் பலவற்றை தனது விருந்து வழங்கிகளாகவும் கொண்டிருக்கின்றது.

வாழையைத் தவிர தென்னை, ஓர்க்கிட்டுக்கள், சோளம், நெல் போன்றவற்றிலிருந்து வழங்கிகளாக்கி தனது இருப்பிடத்தை நிர்ணயஞ் செய்து கொள்கின்றது.

இப்பூஞ்சணத்தை மரஸ்மியெல்லசு இனோடேர்மா (**Marasmiellus inoderma**) என இனங்காணப்பட்டுள்ளது. இது ஒரு வகை காளான் குடும்ப பூஞ்சணமாகும்.

### தண்டமுகலின் அறிகுறிகள்

வாழையில் தொற்றுதல் ஏற்பட்ட பின்னர் பொதுவாக தண்டினது மடல் பகுதிகளில் இப்பூஞ்சணம் விரைந்து பெருகும். பூஞ்சணத்தினது விருத்தி காரணமாக வாழையினது வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் தண்டுப் பகுதியில் மடலினுள்ளே மண்ணிற அல்லது கருமை நிறமாக உள்ளேயுள்ள இழையங்கள் மாறி விடுவதை காணலாம்.




வாழை மடலை சற்று பிரித்து பார்த்தால் இப்பூஞ்சணம் வளர்ந்திருப்பதை அவதானிக்கலாம். நோய் தீவிரமடைந்திருக்கும் நிலையில் போலித் தண்டினது உட்பகுதியில் தொற்று ஏற்பட்டு அதிலுள்ள இழையங்களும் நிறம் மாறி இறந்துவிடும்.

இலை, தண்டு மற்றும் வேர்ப்பகுதியினூடாக உட்செல்லும் இப்பூஞ்சணத்தினால் அது பரவியுள்ள பகுதிகள் நிறம் மாறி அழுக ஆரம்பிப்பதும் இலை மற்றும் இலை மடல் பகுதிகள் வெளிறியிருப்பதுவும் இலையினளவு குறைவடைந்ததும் தண்டுப் பகுதியில் வெடிப்புக்கள் தோன்றுவதும் இறுதியில் தண்டுப் பகுதி சுருங்கி, ஒடுங்கிப் போவதுடன் வாழை இறுதியில் வாடி இறந்து விடும். ஈராப்பதன் அதிகமாக உள்ள வாழைத்தோட்டங்களில் தண்டுப் பகுதியில் காளான் போன்ற பூஞ்சணத்தின் கனியுடலங்கள் உருவாகுவதை அவதானிக்கலாம்.

- **பூஞ்சணம் பரவும் வழிகள்**

நோய் ஏற்பட்ட வாழையிலிருந்து பெறப்படும் வாழைக் குட்டிகளினூடான இப்பூஞ்சணம் விரைந்து பரவும். இது தவிர காளான் போன்று வளரும் கனியுடலத்திலிருந்து உற்பத்தியாகும் வித்திகள் காற்றின் மூலமாக பரவி ஏனைய வாழைகளில் தொற்றினை ஏற்படுத்திவிடும். நெருக்கமாக வாழை நடுவதும் நோயேற்பட்ட வாழையை வெட்டி அகற்றாது விடுவதும் அதிகளவில் நீர்ப் பாய்ச்சுவதும் வாழைத்தோட்டத்தினுள் உள்ள நுண்ணிய காலநிலையை இப்பூஞ்சண விருத்திக்கு ஏற்றதாக மாற்றிவிடுகின்றது.

பூஞ்சண தொற்றினை தண்டுப் பகுதியில் காணமுடிந்தால் முடிந்தளவிற்கு சூரிய ஒளி உள்ளே விழுவதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். 16-IX

### தண்டமுகல் பூஞ்சண நோயை முகாமைத்துவது எப்படி?

வாழைக்குட்டிகள் மூலமாகவே இப்




பூஞ்சணம், நோயுற்ற வாழைத்தோட்டத்திலிருந்து புதிதாக நடுகை செய்யும் பகுதிகளுக்கு இலகுவாக பரவுவதால் வாழைக்குட்டிகளை தெரிவு செய்யமுன் தாய் தாவரத்தில் பூஞ்சணம் தொற்று இல்லாதிருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

வாழைத்தோட்டத்தை சுத்தமாக வைத்திருப்பதுடன் வாழைச்சருகுகள் வாடிய இலைகள் என்பவற்றை வெட்டி அகற்றி வாழையை சுத்தமாக வை, திருக்கவும்.

நோயேற்படும் சாத்தியக்கூறு உள்ள விளைநிலத்தில் வாழையை நெருக்கமாக நடுவதை தவிர்க்கவும். அதிகளவு நீர் பாய்ச்சுவதையும் தவிர்க்கவேண்டும். நோயுற்ற வாழையை வாழையடியோடு வெட்டி கிடங்கினுள் போட்டு எரித்து விடுவது நல்லது.

ரைக்கோடேர்மா எனும் விவசாயியின் நண்பனான பூஞ்சணத்தை விசிறி ஓரளவிற்கு இப்பூஞ்சண விருத்தியை ஓரளவிற்கு குறைத்திடலாம். ஒன்றிணைந்த பராமரிப்பு முறை மூலமே இவ்வாறான பூஞ்சண நோயை கட்டுப்படுத்த முடியும். (தொடரும்)

---

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கண்காணிப்பு கமராக்கள்

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படவுள்ள தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஆங்காங்கே சி.சி.டி எனப்படும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தீப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டு மீறல்களை கண்காணிப்பதற்காகவும் விபத்துக்களை குறைத்தல் மற்றும் ரிக்கெட் விற்பனை என்பவற்றை கண்காணிக்கவே இக்கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் விசேட போக்குவரத்து பொலிஸ் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொட்டாவை தொடக்கம் காலி மாவட்டத்தின் பின்னதுவ வரையான 8 நுழைவாயில்களில் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கண்காணிப்பு பணிப்பாளர் பி.டி.கே பண்டார [illegible]த்துள்ளார்.

அதிவேக வீதி[illegible] இடம்பெறும் போக்குவரத்து குற்றச்செயல்க[illegible]ள இ[illegible]ங்காண பாதுகாப்பு கமராக்கள் பெரிதும் துணை புரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நெடுஞ்சாலைகளின் பாவனையாளர்களுக்காக 1989 எனும் துரித தொலைபேசி சேவையொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. விபத்து சேவை, தீயணைப்பு படையினர், நோயாளர் காவுவண்டி சேவை மற்றும் பொலிஸ் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இந்த துரித தொலைபேசி சேவை இலக்கம் உதவும் எனவும் சுமார் 500 உத்தியோகத்தர்களுடன் நவீன கார்கள், மோட்டர் சைக்கிள்கள், நோயாளர் காவு வண்டிகள், பௌசர்கள், தீயணைப்பு வாகனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இப்பிரிவு இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண போக்குவரத்து சட்டங்களை விட அதிவேக போக்குவரத்து சட்ட விதிகள் வித்தியாசமானவை என்பதால் விசேட போக்குவரத்துப் பிரிவு அவசியம் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்[illegible]து. (அ-2)

## குறிப்பிட்ட நிறுவனங்களின் சொத்துக்களே சுவீகரிக்கப்படும்

### ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிக்கும் சட்டமூலத்தின் மூலம் தொடர்ந்து நிறுவனங்கள் சவீகரிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களைத் தவிர வேறு எந்த நிறுவனமோ அல்லது சொத்துக்களோ எதிர்வரும் காலங்களில் சுவீகரிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக வெளியிடப்படும் செய்திகள் உண்மைக்குக் புறம்பானது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே விரிசலையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (அ-2)

## ஆடம்பரப் பொருட்களின் வரியை அதிகரிக்க வேண்டும்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

ஆடம்பர பொருட்களுக்கான வரித் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மக்களுக்கு இலகுவாக நிவாரணம் வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# குருவின் பார்வையில்

## மரணத்திற்கு அப்பால்

ஆன்மீகம் 38



மரணத்திற்குப் பின்னர் என்ன நிகழும் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எப்போதுமே இருக்கிறது. சில விடயங்களை அனுபவித்துப் பார்த்தால், புரிந்து கொள்ள முடியும். ஆனால், இப்போது அதனை அனுப விப்பதற்கு நீங்கள் தயாராக இல்லை. ஆனால், அனுபவிக்காமலேயே புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது.

தற்போது நான் என்ற தன்மை எப்படி நடந்திருக்கிறது என்ற கவனமோ, விழிப்புணர்வோ இல்லாமல் இருக்கிறீர்கள். இப்போது இந்த உயிர் எப்படி நடந்திருக்கிறது என்ற விழிப் புணர்வு இல்லையென்றால், மரணத் துக்குப் பிறகு என்ன நிகழப்போகிறது என்று புரிந்துகொள்ள வாய்பில்லை. இப்போது இந்த உயிர் எப்படி நடந்திருக்கிறது என்பதை அனுபவ ரீதியாக நீங்கள் உணர்ந்தால், மரணம் நிகழ்ந்தாலும் மரணம் நிகழாவிட்டா லும் அது எப்படிப்பட்டது என்பதை இங்கேயே புரிந்து கொள்ளலாம். மர ணம் என்பதை நீங்கள் உணர்ந்த தில்லை. அல்லது மரணமடைந்த வர்கள் திரும்பி வந்து உங்களை சந்திக்கவும் இல்லை. அப்படியானால், மரணம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை எப்படித் தெரிந்து கொண் டீர்கள். நேற்று இருந்தார்கள், இன்று இல்லாமல் போய்விட்டார்கள். எனவே அவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

உடல் என்பதை நம் அனுபவத்தில் உணர முடிகிறது. தாயின் கருவில் ஓர் அணுவாக ஆரம்பித்த இந்த செயல் வளர்ந்து ஒரு குழந்தையாகப் பிறந்தது. பின்னர் அது உணவைச் சாப்பிட்டு பெரிதாக வளர்ந்து விட்டது. உடல் என்பது, நாம் உண்ட உணவின் குவியல். பூமியிலிருந்து எடுத்த சிறிதளவு மண்ணே உணவாகியிருக்கிறது. உணவே உடலா ககி விட்டது. உடல் என்பது நாம் பூமி யிலிருந்து பெற்றகடன். இதனை நாம் நல்லவிதமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். யாரோ ஒருவரிடம் 10 இலட் சம் ரூபாய் கடன் வாங்கினீர்கள் பத்து ஆண்டுகளில் அதைக்கொண்டு ஒரு கோடி ரூபாய் நீங்கள் சம்பாதித்திருந்தால், பத்து ஆண்டுகள் கழித்து கடன் கொடுத்தவர் கள் உங்களை அணுகும் போது, மகிழ்ச் சியாய் திருப்பிச் செலுத்துவீர்கள். ஆனால், பத்து இலட்சம் ரூபாயை நீங்கள் சரி யாகப் பயன்படுத்தாமல், எல்லாமே அழிந்து விட்டதென்றால், கடன் கொடுத் தவர் உங்கள் வீட்டிற்கு வரும்போது கவலையும் பதற்றமும் பயமும் உங்களை ஆட்கொள்ளுகிறது. அதேவிதமாகப் பூமியில் வாங்கிய இந்தக் கடனை நீங் கள் திருப்பிக் கொடுத்தே ஆகவேண் டும். ஓர் அணுவைக்கூட நீங்கள் வைத் துக் கொள்ள முடியாது. நாம் பெற்ற கடனை ஓர் அடிக்கல்லாகப் பயன்படுத்தி நமது வாழ்க்கையில் அதனை ஒரு மகத்தான சூழ்நிலையாக உருவாக்கி யிருந்தால், கடன் கொடுத்தவர் திருப்பிக் கேட்கும் போது, ஆனந்தமாய் அதனை திருப்பித்தர முடியும். அவ்வாறில்லா மல், நாம் இதனை வீணடித்திருந்தால், கடன் கொடுக்கிற நேரம் வரும்போது, பயமும் பதற்றமும் உருவாகிறது. அதனாற்தான் மரணம் என்பது பயம் நிறைந்ததாக இருக்கிறது.

மனிதனின் முழுமையான ஆற்றல் வெளிப்படாமல் இருப்பதால்தான் மரணத் தைப்பற்றிய பயம் பெரிதாய் இருக்கிறது. மரணம் என்பது ஒரு கட்டுக்கதை மரணம் என்ற ஒன்றே இல்லை. உயிர் மட்டுமே உள்ளது. அது ஒரு நிலையி லிருந்து இன்னொரு நிலைக்குப் போகிறது. நம் அனுபவத்தில் எது இருக்கிறதோ, அந்த நிலையில் இருந்து இன்னொரு நிலைக்குப் போகும்போது, இதனை மரணம் என்கிறோம். மரணம் என்பது இதுவரை உங்களுக்கு நிகழவில்லை. மரணமடைந்தவர்கள் யாரையும் நீங்கள் பார்க்கவில்லை. இறந்துபோன உடலை வேண்டுமானால், நீங்கள் பார்த்திருக் கலாம். ஆனால், இறந்த மனிதனை நீங்கள், எப்போதுமே பார்த்ததில்லை. உங்கள் வாழ்வில் நிகழும் கடைசி கண அனுபவம் மிகமிக முக்கியமானது. இந்த அனுபவத்திற்கு நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எப்படியிருந்தாலும் இந்த உடலைத் தாண்டிப்போகிற ஒரு நிகழ்ச்சி வாழ் வில் நடக்கத்தான்போகிறது. நம் வாழ் வில் நடக்கப்போகும் கடைசி நிகழ்ச்சி அது. உடற்தன்மையில் இருந்து விடுபட்டு, உடல்தன்மையைத் தாண்டிச் செல்லும் இந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. இது நல்ல விதமாக நிகழ, தேவையான விழிப்புணர்வினை உருவாக்க வேண் டும். இதற்குத் தயாராக வேண்டுமா னால், ஒரு பயிற்சியை நீங்கள் மேற் கொள்ளலாம். இன்றிரவு உறங்கச் செல்கீறீர்கள், அப்போது விழிப்பு நிலை யிலிருந்து உறக்கத்திற்குப் போகிற அந்த கடைசிக் கணத்தை விழிப்புணர் வாய் கவனிக்க முடிந்தால், நீங்கள் உடலில் இருந்து, உடல்தாண்டிப் போவதை யும் கவனிக்க வாய்ப்பு உண்டு. இந்த அளவிற்கு நீங்கள் விழிப்புணர்வைக் கொண்டுவந்தால், மரணத்தைப் பற்றி உயிரோடு இருக்கும் போதே முழுமை யாய் புரிந்துகொள்ள வாய்ப்பிருக் கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்

04

**நபிகள் நாயகம்:**

ஞான இலக்கணங்களில் நாயகத் தின் பதினைந்து அடையாளங்களை விவ ரித்தலை, மெஞ்ஞான இரத்தினக் கீர்த் தனம், வேதபுராணம் (கலிம முதலிய காரண படலம் 5.6) மகுஷுக்கு மாலை ஞானச் சந்தக் கும்மி: ஞான வேதாந் தம் (காரணமாலை) ஆகியன காட்டும் மேலும் பல ஞான இலக்கியங்களில் பெருமானாரின் ஞானத்தலைமை நயம்பட உரைக்கப்படுகிறது.

**படைப்பு விபரங்கள்:**

இந்த உலக உயிரினங்களை படைத்த விபரங்களை ஞானப்புகழ்ச்சி 202முதல் 208 பாடல்களிலும் ஞான வேதாந்தம் (ஞானமலர் முப்பது) 8முதல்12 பாடல் களும் பகருகின்றன.

**நபிமார்களுக்கு இறை உதவிய நிகழ்ச்சி:**

அல்லாஹ், நபிமார்களுக்கு உதவிய நன் நிகழ்ச்சிகளை ஞானச்செறிவுடன் ஞானப்புகழ்ச்சியிலும் ஷாஹுல் ஹமீது அப்ப நாயகத்தின் வேதத் திருப்புகழ்ச் சியில் ஞான அற்புதத்திலும் (2முதல்8 பாடல்கள்) வேதபுராணத்திலும் (8முதல்11) பாடுதல் காணலாம்.

**உருவகம்:**

பீரப்பாவின் ஞானமணிமாலையில், வேங்கை-மரணம்: பாண்கிணறு- உலகம்: இரவும்-பகலும் சந்திர, சூரியக் கலை (மூச்சு) என உருவகித்துக் கூறும் பாடல்களும் பஷீரொலியின் ஞான ஆனந்தக்களிப்பில் சுவாசப்பரி(14.32) எனலும்: ஷரீஅத்-கப்பல்: தரீகத்-ஆறு: ஹக்கீகத்-சிற்பி: மஃஅரிபத்-முத்து என்றும் - இருதயம்-விளக்கு: உயிர்- நெய்; புத்தி-திரி: அருள்-தீ என்றும் உருவகித்தலைக் காணலாம். தெளஹீ தானந்தக் கீரத்தனையில்-கல்பு- விளக்கு: ஷரீஅத்-திரி: தரீகத்-நெய்: ஹகீகத்-நெருப்பு: மெளஅரிபத்- சுடரொளி என்று உருவகிக்கிறார்.

**அல்ஹம்து சூரா:**

அல்ஹம்துசூராவினை ஞான இலக் கணங்களான ஞானப்புகழ்ச்சி கோட் டாறு ஞானியரடிகளின் ஹூயில்லல்லா வென்ற ஒருபா இருபஃது ஞானப் பஃறொடை ஹக்கீம் ஷைகு முஹம்மது அப்துல்லாஹ் இன் மெய்ஞ்ஞான பாம் பாட்டிச் சிந்து, அபிராமம் காதர்முஹை தீன் வேதமெய்ஞ்ஞான நூல், வேத புராணம் முதலியன தன்னகத்தே இடை மிடைந்து இயம்பும் ஞானநலம் கற்று அறிந்து அனுபவித்தற்குரியது.

**பேரின்பக் காதல் நாயக நாயகி பாவம்:**

தமிழகத்தில் ஞான இலக்கியங்களில் பீரப்பாவின் ஞான முச்சுடர் பதிகங் களில் பீரப்பா விழியுறைப் பதிகத்தில் இந்நாயக நாயகி பாவத்திற்கு வித் திட்டுச் செல்கிறார் எனலாம். மனதின் உள்மணி, அருமணி, கருமணி,ஒளிமணி மனோன்மணியாகிய இறைமணியினை நாயகியாகவும் அடியாரை நாயகராகவும் பாடும் பேரின்ப நிலையில், இந்நிலை யில் பாமரமரபாகப் பாடியவர்கள் குணம் குடியார்அப்துல் கனிபாவா: ஷெய்கு சுலைமானுல் காதிரி: பூ.மு.முஹம்மது மஸ்தான்(அச்சேறாதது): ஷைகு முஹம் மது அப்துல்லா: தொண்டி மௌன குருமஸ்தான் (பாரோனோக்கண்ணி): ஷெய்குத்தம்பி ஞானியர்: பரிமளத்தார் (ஞான மித்தபோதினி) இற்சூல் பீவி (பேரின்பக்கீர்த்தனை-திறவுகோல்) முதலியோராவர். பெண்பாற் சூபிக் கவி கச்சிப்பிள்ளையம்மாள் ஞானக் கும்மி யில் பேரின்பக் காதல் நேயப்பாங்கினில் பாடுதல் குறிப்பிடத்தக்கது. "லைலா மனோன்மணிக்கண்ணி" பாடிய முத்துப் பேட்டை பீர்முஹம்மது பாபா "லைலா" என்ற அடைமொழியிட்ட இறைக் காத லில் "மஜ்னூன்" ஆகிறார், கண்ணிப் பாடல்கள் ஞானத்தமிழ் இலக்கியங் களில் கண்ணிப்பாடல்கள் பல இடங்க ளில் ஞானம் பகருவன், பொதுவான பராபரம், எக்காலம், நிராமயம், எந் நாளோ, கண்ணிகள் காணப்படுகின்றன. முத்துப்பேட்டை பீர்முஹம்மது மஸ் தான் பாவாரஹ்மான், யாரஹீம், நந்தீஸ் வரி, ஷைதன்யம், தற்பரன் அருண்மயம், திருமயம், ஜமனிக்கண்ணிகளில் ஞானம் நவில்கிறார்.

**உரைநடை நூல்கள்:**

19 ஆம் நூற்றாண்டில் கமுதி பெரு நாழி கருணையானந்த ஞானபூபதி இப்ராஹிம் அவர்களின் ஞானக்களஞ் சியம், ஞானயோக இரகசியம் வேதாந்த பாஸ்கரன்: கோட்டாறு மெய்ஞ்ஞானி முஹம்மது அப்துல்ஸலாமின் "மெய்ஞ் ஞான வினாவிடை" (பதிப்பு 1985)

ஷெய்கு பூஅலிஷாஹ் மதாரின் "ஞானப் பிரகாசம் (நூருல் இர்பான்) இலங்கை சித்திலெஃவ்வை முஹம்மது ஹாசிம் மரைக்காயரின் அஸ்ராறுல் ஆலம்" இதனை ஆர்.பி.எம்.கனி மெய்ஞ் ஞானப் பேரமுதம் எனத்தொகுத்து வெளியிட் டுள்ளார். அஸ்ராரே அனல்ஹக் இவை போன்ற சில காணக்கிடைக்கின்றன. இஸ் லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருநூறிற்கும் அதிகமான ஞான இலக் கியங்கள் தனிநன்கொடையாக-பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண் டிய சிறப்பு அத்தியாயமாகும். அவை கள் இலைமறை கனிகள் என ஒளிந்து, ஒளிர்ந்து விளங்கும் உயர் இலக்கியங் களாகும். உள்ளம் உயர்ந்து உன்னத இறைப்பேரொளியில் பற்றி மூழ்கச் செய்வன. அன்மீக நேயமூட்டுவன.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

கே.ஏ.ஜெஹபர் உசேன்

இம்மை, மறுமைப் பேறு நல்குவன. அவற்றைப் பேணிப்பாதுகாத்து பயன் பெறுவது நம் முதற்கடன்.

1.அரபு சூபிக் கலைச்சொற்கள் அக ராதி அச்சேற வேண்டும்.

2.அச்சு வாகனமேற ஞான இலக்கி யங்கள் அச்சேற வேண்டும்.

3.கிடைக்கப்பெறாத ஞான இலக்கி யங்களை குறைந்தளவு பிரதிகளாவது அச்சிடல்வேண்டும்.

4. இஸ்லாமிய ஞானத்தமிழ் ஆய்வு வளர வழிவகை செய்தல் வேண்டும்.

5. ஒப்புஹழ்வு ஆய்வு தேவை.

6. ஞான இலக்கியங்கள் பாடியோர் வாழ்க்கை வரலாறு தொகுக்கப்பட வேண்டும். காலவாராய்ச்சி இன்றிய மையாதது.

7.இஸ்லாமிய ஞானத்தமிழ் தோற் றமும் வளர்ச்சியும் பற்றிய தெளிவான வரலாறு எழுதப்படல் வேண்டும்.

8.இஸ்லாமிய ஞானத்தமிழ் இலக்கி யங்கள்யாவும் ஒருங்கேசேர கிடைக் கப்பெற வேண்டும்.

9.பல ஆங்கில சூபிச ஆய்வு நூல் கள் வெளிவந்துள்ளதுபோல தமிழி லும் தோன்ற வேண்டும்.

**முடிவுரை**

தமிழ் பாரம்பரியத்தில் வந்தமை யால் தமிழ் முஸ்லிம்கள் பிற தமிழர் களைப்போலவே எண்ணற்ற இலக் கியங்களைப் படைத்து தமிழ்த்தொண்டு செய்துள்ளனர். இந்த மண்ணின் மீது அன்பும், பற்றும் மொழியின் மீது ஆர்வமும் எனைய தமிழர்களைப் போலவே முஸ்லிம் தமிழர்களுக்கும் சொந்தமானது ஆகும். இஸ்லாம் எங்கள் வழி! இனிய தமிழ் எங்கள் மொழி! என்றே தமிழ் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். (முற்றும்)

# கணவன்-மனைவி இணைந்து அன்புடன் வாழ்ந்தால் வீடே வைகுண்டமாகும்

**உலகில் உள்ள அனைத்து சத்தியசாயி நிலையங்களும் இன்றைய நாளை மகளிர் தினமாக கொண்டாடுகின்றன. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

பெண்ணின் பெருமை பற்றி சுவாமி கூறியவற்றை எடுத்துப் பார்த்தால் அவை அளவற்றவை. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

பெண்ணினைக் கடவுளின் சக்தி என்பார்கள். அதுவே மாயையும் கூட. இந்த இரண்டின் உருவமே பெண். அதனாலேயே பெண்ணைப் பராசக்தியின் வடிவம் என்பார்கள். பெண் வீட்டுக்கு அரசி. சக்தியின் பிரதிநிதி, வீட்டுக்கு இலக்ஷ்மி, இயற்கையாகவே அவர்கள் பொறுமை, சகிப்புத் தன்மை, பக்தி, அன்பு, பணிவு நிரம்பியவர்கள். நற்குணம் அனைத்திற்கும் இருப்பிடமானவள் பெண். மனக்கட்டுப்பாடு நிறைந்தவள் பெண்.

பெண்களுக்கும் பதிவிரதா தர்மமே இலட்சியம். அந்த மகத்தான சக்தியால் தான் சாவித்திரி இறந்த கணவனின் உயிரை மீட்டாள். அத்திரி முனிவரின் மனைவியும் தத்தாத்ரேயரின் தாயுமான அனுசுயா திரிமூர்த்திகளை குழந்தைகளாக மாற்றினாள்.

நளாயினி தொழுநோயால் பீடிக்கப்பட்ட தன் கணவனின் உயிரைக் காப்பதற்கு சூரியனின் சஞ்சாரத்தையே தடை செய்தாள். சுமதி கற்பிற் சிறந்தவள். அவள், ஒரு மகரிஷி மறுநாள் சூரிய உதயத்தின் போது அவளது கணவன் மரணம் அடைவான் என்று சாபமிட்ட போது, 'என் எண்ணங்கள் தூய்மையானதாகவும் உண்மையானதாகவும் இருக்குமானால் இனி சூரிய உதயமே இல்லாமல் போகட்டும்' என பிரார்த்தித்தாள். அவள் பிரார்த்தனை நிறைவேறியது. சூரியன் உதிக்கவில்லை, உலகம் இருளில் மூழ்கியது, தேவர்கள்-முனிவர்கள் வந்து அவளை வேண்டிக் கேட்ட போதும் தனது கணவனே தனக்கு முக்கியமானவர் என்றாள். கணவனின் உயிருக்கு பாதுகாப்புத் தருவதாக அவர்கள் கூறிய பின்பே சூரியனை உதிக்கச் செய்தாள்.

கற்பே பெண்ணுக்கு சிறந்த முடி போன்றது. கற்புடைய பெண்ணை உலகமே போற்றும். எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் இந்த கற்பின் சக்தி அவளைக் காக்கும். தன்னைக் கெட்ட எண்ணத்துடன் நெருங்கிய வேடனை ஒரே ஒரு சொல்லின் மூலம் சாம்பலாக்கினாள் தமயந்தி. கண்ணகியின் கற்பின் சக்தி மதுரையையே எரித்தது.

பெண்ணுக்கு நாணம் சிறந்த அணிகலன். அதன் எல்லையைத் தாண்டுவது பெண் தர்மத்துக்கே மாறான செயல். அதனால் பெண் அநேக அபாயங்களுக்கு உள்ளாக நேரிடும். எளிமை, பணிவு, சுறுசுறுப்பு, இனிய சுபாவம், உயர் தத்துவங்களில் பற்று, அடக்கம் ஆகியவைகளின் கலவையே நாணம். நாணம் உள்ளவர்கள் எப்போதும் எல்லை மீற மாட்டாள். நாணமற்ற பெண், பெண்ணினத்திற்கே துரோகமிழைத்தவள் ஆவாள். நாணமில்லாத பெண்ணிற்கு சமுதாயத்தில் மதிப்பிராது. அவளது வாழ்வே வெறுமையானது.

பெண்கள் இறைபக்தி நிறைந்தவர்கள், பக்தி, விசுவாசம், பணிவு கொண்ட பெண்கள் தங்கள் கணவரைக்கூட இறைவழிபாட்டில் இட்டுச் செல்ல வல்லவர்கள். அதிகாலை எழுந்து குளித்து பிரார்த்தனை செய்த பின் வீட்டுக் கருமங்களை ஆற்றுவார்கள். வீட்டையே ஆலயமாக திகழ வைப்பார்கள். கணவன் எப்படிப்பட்டவனாக இருப்பினும் அவனை ஆன்மீகப் பாதையில் இட்டுச் செல்லும் ஆற்றல் படைத்தவள் பெண். எந்த வீட்டில் கணவன்-மனைவி ஒன்று சேர்ந்து வழிபாட்டில் ஈடுபடுகின்றார்களோ, அன்புடன் வாழ்கின்றார்களோ அந்த வீடே வைகுண்டம். திருமணத்தின் போது புரோகிதர் பெண்ணை ஒரு மந்திரம் கூறச் செய்கிறார். அதன்மூலம் மணப் பெண் தன் கணவனிடம் மூன்று வரம் கேட்கின்றார். அவை,

1-தர்மேசா- உங்கள் குடும்ப கௌரவத்தை சிறந்த முறையில் காப்பாற்ற எனக்கு அனுமதி தாருங்கள்.

2-அர்த்தேசா- உங்கள் செல்வத்தைக் காப்பாற்ற அனுமதி தாருங்கள்.

3- காமேசா-உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற அனுமதி தாருங்கள் என்பவையே.

இதில் அவள் தனக்காக எதையும் கேட்பதில்லை. கணவன் மோட்சத்தை மட்டும் இறைவனிடம் கேட்கின்றாள். இதுபோன்ற தியாக உள்ளம் கொண்டவள்தான் பெண்.

புகுந்த வீடு, பிறந்த வீடு ஆகிய இரண்டு வீட்டின் கௌரவத்தை கட்டிக் காப்பவள் பெண்.

குழந்தைகளை ஆத்மீகப் பாதையில் இட்டுச் செல்பவள் பெண். நல்லொழுக்கம் உடையவர்களாக வளர்ப்பவள் அவள். தாயின் உணர்விற்கேற்பவே குழந்தைகள் நல்லவர்களாகவோ அன்றித் தீயவர்களாகவோ மாறுகின்றனர். காந்தியின் தாயார் புத்லிபாய், காந்திஜி பொய் சொன்னதையிட்டு வருந்தியதனால்தான் காந்தி அன்று முதல் உண்மையே பேசி வாழ்ந்தார். ஆபிரகாம்லிங்கனின் தாயார் லிங்கனிடம் தன்னம்பிக்கையாக வாழக் கற்றுக் கொள். தன்னம்பிக்கைதான் அனைத்து வெற்றிகளுக்கும் ஆதாரம் என அடிக்கடி கூறியதால்தான் ஏழைச் சிறுவன் லிங்கன் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆனார். இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், சங்கராச்சாரியார் ஆகியோரினதும் புகழோங்க காரணம் அவர்களைப் பெற்ற தாய்மார்களே.

பகவத்கீதை, ஒருவன் தனது இரு கரங்களையும் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்திட உயர்த்தாது. தன் வாய் வலிக்கின்ற வரையில் இறைவனது நாமங்களை உரைத்திடாது. இறைவனது நாமத்தை இதயத்தில் கொள்ளாது இருப்பதனால் என்ன பயன்? அவனை ஈன்றெடுத்த பெண்ணிற்கே அவன் ஒரு களங்கமாகின்றான் என்கின்றது.

ஆண்கள் ஞானத்திற்கு உருவமாகத் திகழ்ந்தால் பெண்கள் பக்தியின் உருவம். **தாய்-தந்தை** என்று பெண்ணை முன்னிலைப்படுத்தி பேசுவது வழக்கம். **ராதா-கிருஷ்ணன், சீதா-ராமன், ஜானகி-ராமன்** என்று அழைப்பதற்கு காரணம் பெண்களின் தெய்வ சிந்தனையே. எப்போதும் தெய்வ சிந்தையில் வாழ்பவர்கள் பெண்கள்.

பெண்கள் எப்படி எப்படி எல்லாம் புகழுடன் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள், வாழ வேண்டும் என்று பகவான் பாபா அவர்கள் கூறிய கருத்துக்களை மனதில் இருத்தி சாயி அடியார்கள் மட்டுமன்றி அனைத்துப் பெண்களும் வாழ வேண்டும்.

பெண்களின் கடமைகள், பொறுப்புக்களை எடுத்துக்காட்டுக்கள் மூலம் பகவான் பாபா அவர்கள் கூறியுள்ளார்கள். இதனை ஒவ்வொரு பெண்களும் மனதில் பதித்து மனச்சாட்சியின்படி வாழ்ந்தால் நாட்டின் முதுகெலும்பாக, உயிர் மூச்சாக, இதயமாக பெண் திகழ்வாள். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் சிறப்புடன் வாழ்வான். நாடு தர்ம பூமியாக விளங்கும்.

**திருமதி மதிவதனி சரவணபவ[illegible],**
**ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம்,**
**வடபிராந்தியம்.**

## சம்பள உயர்வுகோரி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது-ஜே.வி.பி

(கொழும்பு)

இலங்கையில் கடந்த காலங்களில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. எனவே எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கக்கோரியும் தனியார் துறை ஊழியர்களுக்கு 40 சதவீத சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கத்தை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி நாடளாவிய ரீதியில் பாரிய அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரு[illegible] 24 ஆம் திகதி வியாழக்கிழமை அனுராதபு[illegible]ல் பாச யாத்திரையும் மறுநாள் வெள்ளிக்கிழமை [illegible]காழு[illegible]பில் துண்டுப்பிரசுர விநியோகமும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாந்தோட்டையில் பாரிய ஆர்ப்பாட்டமும் 30 ஆம் திகதி கொழும்பில் பாதயாத்திரையும் பதுளை, மாத்தளை, கேகாலை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்புப் போராட்டங்களும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-2)

## துமிந்தவை கைது செய்ய உத்தரவு; நீதித்துறையில் நம்பிக்கை

### பாரதவின் மகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தந்தையின் கொலையுடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மனின் மகள் ஹிருனிகா மகிழ்சியைத் தெரிவித்துள்ளார்.

இந்த உத்தரவு இலங்கையின் நீதித்துறையில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

கொலை இடம்பெற்ற வேளையில் துமிந்த சில்வா அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தார் என்ற அடிப்படையிலேயே நீதிமன்றம் அவரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தின் சந்தேகநபர் பட்டியலில் துமிந்த சில்வாவின் பெயர் உள்ளடக்கப்படாத போதும் அவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து தமது தந்தையின் கொலையின் பின்னர் முதல் தடவையாக தாம் சந்தோசமடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## காங்கேசன்துறை -பளை ரயில் பாதை உடன்படிக்கை

### புகையிரத திணைக்கள பணிப்பாளர்

(கொழும்பு)

காங்கேசன்துறையில் இருந்து பளை வரையில் புதிய புகையிரதப் பாதையை அமைப்பதற்கான உடன்படிக்கையில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று நடைபெற்றதாக பகையிரதத் திணைக்களம் தெரிவிக்கின்[illegible]து.

இது தொடர்பிலான நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றதாக திணைக்களத்தின் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

260 மில்லியன் ரூபா செலவில் 43 கிலோமீற்றர் தூரமுடைய குறித்த ரயில் பாதையை இந்திய நிறுவனமொன்று நிர்மாணிக்கவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது. (அ-2)

# புலிகள் போருக்கு தயாராவது குறித்து கண்காணிப்புக்குழு அறியாதது ஏன்?

## நோர்வே தோல்விகளையே எடுத்துக் காட்டுகின்றது என்கிறார் கோத்தபாய



(கொழும்பு)

**நேட்டோவிடம் இருந்தும் இந்தியாவின் றோ அமைப்பிடம் இருந்தும் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக் கொண்ட இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராகிறார்கள் என்ற தகவல் தெரியாமல் போனது எப்படி? என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.**

அமைதிக்கான அடமானங்கள் என்ற தலைப்பில் வெளியாகியுள்ள, இலங்கையில் தோற்றுப் போன நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ள அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

நேட்டோ மற்றும் றோவிடம் இருந்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலனாய்வுத் தகவல்களைப் பெற்றது என்பதை ஒஸ்லோ ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தபோதே விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராவது பற்றிய தகவல் அவர்களுக்கு தெரியாமல் போயிருக்க முடியாது.

விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராகி வருவது பற்றிய எமது மதிப்பீடுகளை வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் உறுதிப் படுத்திய நிலையில் அவர்கள் சமாதான முயற்சிகளை குருட்டுத்தனமாக வழி நடத்தியது நிலைமைகள் வேகமாக மோசமடைவதற்குக் காரணமாகி விட்டது என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

றோ மட்டுமே தம்மை முறைசாரா வழிகளின் ஊடாக அணுகியதாகவும் ஆனாலும் அவர்களை தம்மால் முழுமையாக நம்ப முடியவில்லை என்றும் நேட்டோவின் புலனாய்வு அறிக்கைகளை மட்டுமே உறுதி செய்ய முடிந்தது என்றும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கூறியதாக மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

றோவின் தகவல்களை நம்பாது போனாலும் நோர்வேயியர்கள் புதுடில்லியில் றோ அதிகாரிகளுடன் உயர்மட்டச் சந்திப்புகளை நடத்தியுள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

இதற்கிடையே ரேடர் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் இந்தியாவும் எதிர்ப்பை வெளியிட்டதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, நோர்வேயின் அறிக்கை சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகளை மட்டும் சுட்டிக்காட்டுகிறது. இருந்தபோதிலும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு புலனாய்வுத் தகவல்களை நேட்டோவிடம் இருந்தோ அல்லது பிராந்திய அல்லது பூகோள சக்தியிடம் இருந்தோ பெற்றிருக்கக் கூடும்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகவே தோற்கடிக்க வேண்டியிருந்தது. தீவிரவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என்று அனைத்துலக சமூகம் நம்பியது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

பேச்சுக்களில் நிலையாகப் பங்கெடுக்க இலங்கை இராணுவத்துக்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட அதேவேளை நோர்வேஜிய இராணுவ வல்லுநர்கள் படைச்செயற்பாடுகளை குறுக்கிக் கொள்ளும் இராணுவ நுட்பக்கூறுகளில் தொடர்புபட்டிருந்தனர்.

முழுமையான செயற்பாடுகள் தொடர்பாகவும் குறிப்பாக இராணுவ மற்றும் புலனாய்வு அம்சங்கள் குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டிய தேவையை நோர்வேயின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# தொலைத்தொடர்பு கருவி வாகரையில் மீட்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான அதி சக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகள், வாகரை பனிச்சங்கேணி பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் வாகரை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

வாகரை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் இந்த தொலைத்தொடர்புக் கருவிகள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் தாக்குதல் காரணமாக பின்வாங்கிச் சென்ற விடுதலைப் புலிகள் இந்த கருவிகளை புதைத்து விட்டு சென்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கிழக்கு மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜகத் அபே சிறிகுணவர்த்தன மற்றும் மட்டக்களப்பு பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ன ஆகியோரின் ஆலோசனைகளின்படி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# மரண அறிவித்தல்

## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி



காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் யாழ். ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி கடந்த (16.11.2011) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி செந்தில்நாயகி தம்பதியினரின் அன்புமகளும், பரம்சோதி (வெங்கடேஸ்வரா-ஸ்ரோர்ஸ்) இன் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், செந்தூரன், சிவதர்ஷனி (சிங்கப்பூர்), சாளினி ஆகியோரின் அன்புத்தாயாரும், காண்டீபன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) அன்பு மாமியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியினரின் சம்பந்தியும், அருணகிரிநாதர் (ASK அன் கம்பனி-கம்பளை), இராஜகுமாரி, கமலகண்ணன், (கண்ணன்-ஸ்ரோர்ஸ்-கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், கருணாநிதி (சூரியன் களஞ்சியம்), சிவசோதி (கந்தன்-களஞ்சியம்- கிளிநொச்சி), கற்பகநாதன் (சிறிமாதவன்-யாழ்ப்பாணம்), கணேசன் (ராசு களஞ்சியம்-யாழ்ப்பாணம்), பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினிதேவி, இராஜேஸ்வரி பாலசிங்கம், சிவானந்தம், இராஜேந்திரம் (குகன் ஸ்ரோர்ஸ்-பண்டாரவளை), சிவபாதம், சொர்னாதேவி, சிவயோகன் (கம்பளை), சுரேந்திரன் (கிருஷ்ணா ஜுவலரி- யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20/11/2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

347/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
Tel: 0212225524, 077-7688488

தகவல்: குடும்பத்தினர்

(சி-4998)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17-11-2011 முதல் 16-12-2011 வரை




**(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)**

**சுதந்திரமாகச் செயற்பட்டு சுயமாக வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!**

எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்கள் நீங்கள். திட்டமிட்டு செயற்படுவதில் திறைமைசாலியாக இருப்பீர்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் எடுத்த காரியத்தை முடிப்பதில் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை. கொள்கைப் பிடிப்பும் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். அத்தோடு கோபமும் கூடவே இருக்கும். முன்கோபத்தை மட்டும் குறைத்துக் கொண்டால், முன்னேற்றங்களை எளிதில் காணலாம்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது பரிவர்த்தனை யோகத்தால்பலன் கிடைக்கும் மாதமாகவே கருதலாம். பக்கபலாமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும். சிக்கல்களிலிருந்து விடுபடுவீர்கள். செவ்வாய் உங்கள் இராசிக்கு யோகக்காரன் என்பதால், பூமியோகம், பொருள் விருத்தி, பொன்னான எதிர்காலத்திற்குரிய அஸ்திவாரம் அனைத்தையும் அமைத்துக் கொடுக்கும்.

புதன், சுகக்கிர யோகமும் புதன், ஆதித்ய யோகமும் இருப்பதால், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிக பொறுப்பு வந்து சேரும்.

கட்டிடம் கட்டும் பணி பாதியில் நிற்கிறதே என்ற கவலை இனி அகலும். எதிரிகள் விலகுவர். பணம் வாங்கிய நண்பர்கள் திருப்பிக் கொடுக்கவில்லையென்ற கவலை இனி அகலும்.

சனி விலகுவதற்கு ஆயத்தம் செய்யும் நேரம் இது. எனவே சனி வழிபாட்டை சனிக்கிழமை தோறும் செய்து வருவது நல்லது. சனிக் கவசம் பாடி, சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு, குரு கவசம் பாடி குருவழிபாட்டை மேற்கொள்வதும் நல்லது.

உங்கள் இராசிக்கு 3, 10 இற்கு அதிபதியான சுக்கிரன் நவம்பர் 23 ஆம்திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானாதிபதி, பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். சிக்கல்கள் ஒவ்வொன்றாக முடிவுக்கு வரும். உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர். ஊர்மாற்றம், வீடுமாற்றம் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும்.

உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியான புதன் வக்ரம் பெற்று, நவம்பர் 30 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பணப்புழக்கத்தில் சற்று குறைவு ஏற்படும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகாது அதேநேரம் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்க வியலாது. மாமன், மைத்துனர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தினரின் குணங்கள் திடீர்திடீரென மாறலாம். பணிகள் பலவும் பாதியில் நிற்கலாம். வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய நேரம் இது.

டிசம்பர் 15 ஆம் திகதி மேஷத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, அதன் பார்வை முழுமையாக உங்கள் இராசியில் பதிகிறது. இதனால், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். பட்ட கஷ்டங்கள் தீரும் பணவரவு திருப்தி தரும். இம்மாதம் முருகன் வழிபாட்டை செவ்வாய்க்கிழமை தோறும் வைத்துக் கொண்டால், முன்னேற்றங்கள் தானாகவே வந்து சேரும்.

இம்மாதம் வசதி, வாய்ப்புக்கள் பெருகும் மாதமாகக் கருதலாம். கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். நவம்பர் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை, உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. விட்டுக் கொடுத்துச் சென்றால், வெற்றி தான். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் அமைப்பு உருவாகும். விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். பொது வாழ்வில் புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரும் நேரம் இது.

# சிவல்புரி சிங்காரம்

**(உத்தரம் 2,3,4 பாதங்கள், அத்தம், சித்திரை 1,2, பாதங்கள்)**

**எப்படிப்பட்டவர்களையும் தன் பேச்சு சாதுரியத்தால் இணைத்துக் கொள்ளும் கன்னி இராசி நேயர்களே!**

உங்களை சாமர்த்தியசாலிகள் என்றே சொல்ல வேண்டும். உலகியல் வாழ்க்கை தெரிந்து, கற்பனை உலகிலும் சஞ்சரிப்பீர்கள். வாழ்வில் குறிப்பறிந்து செயற்படுவீர்கள். மற்றவர்கள் தன்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்பவர்களின் பட்டியலில் முதல் இடம் பிடிப்பீர்கள். தன்னை நம்பியவர்களைக் கை விடமாட்டீர்கள். உங்களுக்கு இந்தக் காத்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, ஜென்மச்சனியின் ஆதிக்கம் ஒருபுறம், அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் மற்றொருபுறம் இருப்பதால், எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. இருப்பினும் இலாப ஸ்தானத்தில் சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால், பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்காது.

கேது பலத்தால், பயணங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் குறித்த விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சகோதர ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. எனவே ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும் சூழ்நிலை உண்டு. மாற்று மருத்துவத்தை மேற்கொண்டால், உடல் நலம் சீராகும். கூட்டாளிகளில் சிலரை மாற்றம் செய்ய விரும்புவீர்கள். குறிப்பாக கூட்டுத் தொழில் புரிவோர் என்ற விதத்தில் இலாபம் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவர். அதனால், பங்குதாரர்களை மாற்றினால், பணவரவு பெருகும் என்ற எண்ணம் மேலோங்கும். என்ன இருந்தாலும் ஜென்மத்தில் சனி இருக்கும் வரை. கொஞ்சம் நிதானமாகச் செயற்படுவது நல்லது. சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதோடு, வாரம் தோறும் சனிக்கிழமை விரதம் இருந்து காகத்திற்கு எள் கலந்த சாதம் வைத்தும் காகவாகனத்தை மகிழ்விக்கலாம்.

தனுசு இராசியில் நவம்பர் 23 ஆம் திகதி சுக்கிரன் பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக வாகன மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும். முன்னோர் சொத்தில், முறையான பங்கீடு கிடைக்கும். குடும்பத்தில் பெண்களால், ஏற்பட்ட சிக்கல்கள் அகலும்.

நவம்பர் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை கூடுதல் கவனத்துடன் இருக்கவேண்டும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். குடும்பச் சுமை கூடும். கூடுதல் இலாபம் கிடைக்கும் என்று எண்ணி செயற்பட்ட செயல்களில் தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும்.




உங்கள் இராசியைப் பொறுத்தவரை கேந்ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறுகிறார். வளர்ச்சிப்பாதையில் சிறு இடையூறுகள் ஏற்படலாம். உறவினர் பகை உருவாகாமல், பார்த்துக் கொள்வது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபடுவதால், சந்தோசம் வந்து சேரும். "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்ற பழமொழியைக் கடைப்பிடிக்க வேண்டிய மாதம் இது. பொறுமையோடு செயற்பட்டால், பெருமைகள் வந்து சேரும். புதியவர்களை நம்பிச் செயற்படுவதை தவிர்ப்பது நல்லது.

சுப விரை யங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ள மூத்தவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடந்தால், சிக்கல்கள் ஏற்படாது. கணவன் மனைவிக்குள் கோபத்தைக் குறைத்து அனுசரித்துச் செல்வதன் மூலமே மனநிம்மதி காணமுடியும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு பெருக, சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

(வளரும்)

# பாரதவின் மகனுக்கு கொலை அச்சுறுத்தல்

## பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி சுமணா பிரேமச்சசந்திர, தமது மகனான யோஹின்ராவை கொலை செய்யப்போவதாக தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்படுவதாக, கறுவாத்தோட்ட பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

கொலைக்கு முன்னர் தமது கணவருக்கும் இதேபோன்று மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

எனவே, தமது மகனுக்கும் அந்த நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக சுமணா குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலையும் இவ்வாறான அச்சுறுத்தல் அழைப்பு விடுக்கப்பட்டதாக சுமணா தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட்ட மூவர் கடந்த ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி முல்லேரியாவில் வைத்து கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. (அ-2)

# விவசாய விதை வங்கியை இலங்கையில் அமைக்க முடிவு

(கொழும்பு)

சார்க் வலய நாடுகளுக்கான சர்வதேச தரத்திலான விவசாய விதை வங்கி ஒன்றை இலங்கையில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைய அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

மாலைதீவில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் கைச்சாத்திடப்பட்ட நான்கு உடன்படிக்கைகளின் ஒன்றுக்கு அமைவாக இந்த விதை வங்கி நிறுவப்படவுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடு மற்றும் வலய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு போன்றவற்றின் அடிப்படையில் வலயத்தில் நிலவும் விவசாய பயிர்ச் செய்கைக்கான விதைகளுக்கான தட்டுப்பாட்டை இனம் கண்டு அவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த வங்கி அமைக்கப்பட்டுள்ளது. (அ-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவை மைந்தனும், துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமாகிய "செஞ்சொற் செல்வர்" **திரு. ஆறு. திருமுருகன்** அவர்களுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டமையையிட்டு நடாத்தப்படும் **பாராட்டு விழா**

இடம்:- இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபம்

காலம்:- 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

பெரியோர்களின் பாராட்டுரைகளைத் தொடர்ந்து இந்தியா-தமிழ்நாடு-திருச்சி தனலக்சுமி உயர்நிலைப் பள்ளியின் விரிவுரையாளர் "இலக்கியச் செல்வர்" திரு.இரா. மாது அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாக்குழுவினர்

ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

(6819)



## ஸ்ரீ அம்மா பகவான் அருளும் ஆரோக்கிய தீட்சைஷ

அன்பர்களே!

சம்பூர்ண அவதார புருஷர்களாகிய ஸ்ரீ அம்மாவும் பகவானும் மனித குலத்தை துயரத்தில் இருந்து நிரந்தரமாக விடுவித்து ஜீவன் முக்தியை அவர்களுக்கு அளிக்கும் சங்கல்ப்பத்துடன் இப்பூவுலகில் அவதாரம் செய்துள்ளனர்.

ஸ்ரீ அம்மா பகவானால் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள Oneness University இல் அம்மா பகவானின் மகா தீட்சைஷ, ஆரோக்கிய தீட்சைஷ, முக்தி தீட்சைஷ மற்றும் நேரடி தரிசனம் மூலம் அருள்பெற்று வந்துள்ள பக்தர்களால்

**ஆரோக்கிய தீட்சைஷ**

நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இடம்:- சிவன்கோவில் தேவஸ்தான மணிமண்டபம், சுன்னாகம் -ஸ்ரேசன்றோட்

காலம்:- 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணி

இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி ஸ்ரீ அம்மா பகவானால் அருளப்படும் நோய் நிவாரண தீட்சைஷயைப் பெற்று ஆனந்தப் பெருவாழ்வு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- உடல் உள ஆரோக்கியப் பிரச்சினை உள்ளவர்கள் தவறாது கலந்து கொள்ளவும். ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் ஆரோக்கியம் நீடித்து நிலைக்க தவறாது கலந்து கொண்டு அருளைப் பெறவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
0212222314, 0777393529,
0776153842, 0213734201,
0759004130, 0774780999

ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்கள், யாழ்ப்பாணம்.

(6810)


# 2011.11 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1493-கொலம்பஸ் முதல்நாள் தான் கண்ட தீவின் கரையை அடைந்து அதற்கு சான் ஜூவான் பட்டீஸ்டா எனப் பெயர் சூட்டினார்.

★ 1794-அமெரிக்கப் புரட்சிப் போரின் பின்னால் எழுந்த சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாகவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1816-வார்சா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 1881-உக்ரேனில் ஒடிசா நகரில் விண்கல் ஒன்று வீழ்ந்தது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்:- மேற்கு அவுஸ்திரேலியாவில் HMAS சிட்னி மற்றும் HSK கோர்மோரன் என்ற போர்க் கப்பல்களுக்கிடையில் நிழந்த மோதலில் இரண்டும் மூழ்கின. இதில் 645 அவுஸ்திரேலியக் கடற்படையினரும் 77 நாசி ஜேர்மனியக் கடற்படையினரும் உயிரிழந்தனர்.

★ 1942- இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் சண்டை- சோவியத் படையினர் ஸ்டாலின்கிராட் நகர் மீது மீள் தாக்குதலை ஆரம்பித்தனர். இது பின்னர் அவர்களுக்கு வெற்றியை அளித்தது.

★ 1946-ஆப்கானிஸ்தான், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியன ஐ.நாவில் இணைந்தன.

★ 1969-அப்போலோ 12 விண்கலத்தில் சென்ற சார்ள்ஸ் கொன்ராட், அலன் பீன் ஆகியோர் சந்திரனில் இறங்கி நடந்த மூன்றாவது, நான்காவது மனிதர்கள் என்ற பெயரினைப் பெற்றனர்.

★ 1969-பிரேசில் உதைபந்தாட்ட வீரர் பெலே தனது ஆயிரமாவது கோலைப் பெற்றார்.

★ 1977-எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அமைதிப் பேச்சுக்களுக்காக இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் சென்ற முதல் அரபுத் தலைவர் இவரே.

★ 1977-போர்த்துக்கல் போயிங் விமானம் ஒன்று மெடெய்ரா என்ற இடத்தில் விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் உயிரிழந்தனர்.

★ 1984- இலங்கை இராணுவத்தின் வட மாகாணத் தளபதி பிரிகேடியர் ஆரியப்பெரும யாழ்ப்பாணம் கட்டுவன் என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★ 1984-மெக்சிக்கோ நகரில் எண்ணெய்க்குதங்களில் ஏற்பட்ட பெரும் வெடிப்புகளினால் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 500 பேர் உயிரிழந்தனர்.

★ 1985- பனிப்போர்: அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட்ரேகன், சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பச்சோவ் இருவரும் ஜெனீவாவில் முதன் முறையாகச் சந்தித்தனர்.

★ 1999-மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது சென்ஷோ விண்கலத்தை ஏவியது.

★ 2005-மகிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 5ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

### பிறப்புக்கள்

★ 1831-ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20ஆவது குடியரசுத் தலைவர். (இ.1881)

★ 1835- ராணி லட்சுமிபாய், இந்திய ராணி. (இ.1858)

★ 1909- பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (இ.2005)

★ 1925- சலில் சௌதுரி, வங்காள இசையமைப்பாளர். (இ.1995)

### இறப்புக்கள்

★ 1998- டெட்சுயா ஃபுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (பி.1920)

★ 2008- எம்.என்.நம்பியார், நடிகர் (பி.1919)



★ இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திராகாந்தியின் பிறந்ததினம். (இ.1984)

# பிரகீத்தை இலங்கைக்கு கொண்டுவர உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அவரது மனைவி வேண்டுகோள்

காணாமல் போயுள்ள ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொடவை ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தும்படி அவரின் மனைவி சந்தியா எக்னெலிகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா.வின் மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைச் சார்பில் கருத்துரைத்த முன்னாள் சட்டமா அதிபரும் அரசாங்கத்தின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் பிரகீத் வெளிநாடொன்றில் உயிருடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதாக கூறிய அவரின் மனைவி தனது கணவர் உயிருடன் இருப்பாரேயானால் அவர் குறித்த தகவல்களை வெளியிடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தின் போது இலங்கையின் முன்னாள் சட்ட அதிபரும் அரசின்சட்டஆலோசகருமான மொஹான் பீரிஸ் பிரகீத் எக்னெலிகொட உயிருடன் இருப்பதாகவும் அதுவும் அவர் வெளிநாடொன்றில் இருப்பதாகவும் கூறியுள்ளதாக பிரகீத்தின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

ஒருவகையில் கடந்த இரண்டு வருடங்களாக பிரகீத் எக்னெலிகொடவைத் தேடித் திரியும் தனக்கும் ஏனைய அமைப்புக்களும் இது மகிழ்ச்சியான ஒரு செய்தியாகவே அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மொஹான் பீரிஸ் என்பவர் இலங்கை சார்பாகவே அன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தில் பங்கேற்றதாகவும் அவர் அந்த கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதி என்ற வகையிலேயே கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்ட சந்தியா எக்னெலிகொட பிரகீத் எங்கு, எந்த நாட்டில் இருக்கின்றார் என்பது தொடர்பில் தனக்கு தகவல் கொடுக்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் பிரகீத் எக்னெலிகொடவை கண்டுபிடித்து தரும்படி இலங்கை நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளதனால் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தும்படியும் கோரிக்கை விடுத்த அவரது மனைவி இவை அனைத்தையும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னதாக செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி என்பது பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் தினம் என்பதனையும் அவர் நினைவுபடுத்தினார்.

இந்தத் தினத்திற்கு முன்னர் முன்னாள் சட்டமா அதிபரான மொஹான் பீரிஸ் நீதிமன்றில் ஆஜராகி கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் இலங்கை அரசாங்கம் இந்த பிரச்சினையில் தலையிட்டு சகல நாடுகளிலிருந்தும் பிரகீத் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் கூறினார்.

எனவே பிரகீத் தொடர்பில் மொஹான் பீரிஸ் பொய் கூறியிருப்பாரேயானால் அன்றைய மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை சார்பில் அவர் தெரிவித்த அனைத்து கூற்றுக்களும் பொய்யானதாகும் எனவும் வாதிட்டார்.

முன்னாள் சட்டமா அதிபர் இவ்வாறு ஐ.நாவின் மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை சார்பாக பொய்யுரைத்துள்ளாரானால் இதன் மூலம் அவர் காணாமால் போயுள்ள பிரகீத் எக்னெலிகொடவிற்கும் தனக்கும் பிரகீத்தை தேடும் பொது அமைப்புக்களுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் ஐ.நா. சபைக்கும் துரோகம் இழைத்துள்ளதாகவே அமையும் எனவும் கூறினார்.

எனவே ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் இந்த அரசாங்கத்தினால் பிரகீத் தொடர்பில் தகவல்களை வழங்கவோ அவரை ஆஜர்படுத்தவோ முடியாது போகுமானால் இது தொடர்பில் தன்னால் செல்ல அதிகூடிய உச்ச எல்லைக்கும் செல்லத் தயங்க மாட்டேன் எனவும் எச்சரித்துள்ளார். (அ-2)

## கொட்டாஞ்சேனையில் தோட்டாக்கள் மீட்பு

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகா வித்தியாலய மாவத்தை பகுதியில் பொது மலசலகூடத்தின் சுவர்கள் இடையே எஸ்லோன் குழாய் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 278 தோட்டாக்களை கொட்டாஞ்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக்கிடைத்த இரகசிய தகவலையடுத்தே மேற்படி தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-2)

# மீனவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்கி விவசாயிகளுக்கு அதை நிறுத்துவதா?

### யாழ்.விவசாயிகள் சம்மேளன தலைவர்

மீனவ சமூத்திற்கு அடிப்படை ஓய்வூதியமாக 10 ஆயிரம் ரூபா வழங்க அமைச்சரவையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால் ஏழை விவசாயிகளான எமக்கு 1000 ரூபாவை அடிப்படை ஓய்வூதியமாக வழங்க திறைசேரியில் நிதியில்லையென்று நிறுத்தப்படுகின்றது.

இது எந்தளவிற்கு நியாயமானது, நீதியானது, இதை யாரிடம் சொல்லி பிரச்சினையை தீர்ப்பது, இது விவசாயிகளுக்கு செய்யப்படும் அநீதியாகும் என யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசு நாம் பயிரிடுவோம், தேசத்தை காப்போம், மனைப்பொருளியல், விவசாய மேம்பாடு, காணி அபிவிருத்தி ஊடாக விவசாய அபிவிருத்தி என பல தொனிகளில் கருத்தது வெளியிட்டு அபிவிருத்தி செய்கிறது.

ஆனால் விவசாயிகளின் அடிப்படையான ஓய்வூதியம் ஆயிரம் ரூபாவை நாடளாவிய ரீதியில் நிறுத்தி வைத்துள்ளமை ஆபத்தானது.

ஒவ்வொரு விவசாயிகளும் இத்திட்டத்தில் இலவசமாக சேரவில்லை. பெருமளவிலான ஆரம்பநிதியை முழுமையாகவும் பகுதியாகவும் செலுத்தியுள்ளனர். இவர்களுக்கு 60 வயதின் பின்னரே ஓய்வுதியம் வழங்கப்படுகிறது.

எனவே, எக்காரணம் கொண்டும் இந்த விவசாய ஓய்வூதியத்தை அரசு நிறுத்தமுடியாது. உடனடியக நிலுவையுடன் வழங்க முன்வர வேண்டும்.

இல்லாவிடில் நாட்டில் 25 மாவட்டங்களில் உள்ள ஒரு இலட்சத்து 22 விவசாய ஓய்வூதியர்களை இணைத்து நாடுதழுவிய போராட்டம் நடத்தும் நிலை ஏற்படும்.

எனவே, அரசும்விவசாய அமைச்சும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். (அ-2)

# வரவு-செலவுத்திட்ட விவாதம் முடியும் வரை அமைச்சர்கள் வெளிநாடு செல்லத் தடை

வரவு- செலவுத்திட்ட விவாதம் முடிவடையும் வரை ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங் களை மேற்கொள்வதற்கு தடைவிதிக்கப்பட் டுள்ளது.வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் மாத்திரம் ஐக்கிய நாடுகளின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை நிதியமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு- செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார். இதனையடுத்து இம்மாதம் 22 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை விவாதங்கள் நடைபெறவுள்ளன.

அதனால் விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# துமிந்தவின் விடயத்தில் சட்டம் தன் கடமையைச் செய்யும்-கெஹலிய

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் நாட்டில் உள்ள சட்டத்துக்கு அமைய அவரது கைது விவகாரம் இடம்பெறும் என்று அரசாங்க பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதேவேளை துமிந்த சில்வா தமது மேலதிக சிகிச்சைக்காக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளமைக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இது அவரது குடும்பத்தினர் தொடர்புபட்ட விடயம் என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம் பெற்றது. இதன்போது துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடந்து முடிந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பின் போது முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் கொல்லப்பட்டதுடன் துமிந்த சில்வா எம்.பி.படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)


# அரசாங்க அறிவித்தல் யாழ்.மாவட்ட செயலகம்

## வாகனம்-ஏல விற்பனை-வாகன இல: 62-7309

## TOYOTA Hiace VAN

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள 62-7309 இலக்க TOYOTA HIACE VAN வாகனம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் களஞ்சிய நலன்புரிக் கிளையுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என்பதுடன், விற்பனை தொடர்பான கேள்வி விண்ணப்பப்படிவத்தினை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 21-11-2011 ஆந் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.3.30மணி வரையும் மீளளிக்கப் படாத வைப்புப் பணமாக ரூபா 1000. 00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 25,000.00 உம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைத் தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் வாகனம் ஏல விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் -2011 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதம கணக்காளர் அவர்களின் அலுவலகத்தில் உள்ள அலுவலக கேள்விப் பெட்டியிலோ நேரடியாகவோ 05-12-2011 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். அன்றைய தினம் மு.ப.11 மணிக்கு கேள்விப்பத்திரப்பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

நிபந்தனைகள்:-


1. மாவட்டச் செயலகக் கணக்குக் கிளையில் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவற்றைச் செலுத்திப் பற்றுச்சிட்டையைப் பெற்றுக் கொண்ட பின்னரே வாகனத்தைப் பார்வையிட முடியும்.

2.கேள்வி ஆவணங்கள் யாவும் 2011-12-05 ஆம் திகதி மு.ப 11.00 மணியளவில் அரச அதிபர் மாநாட்டு மண்டபத்திற் திறக்கப்படும்.

3.தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் 05-12-2011 ஆந் திகதியன்றே சகல ஆவணங்களுடனும் வாகனத்தை மாவட்டச் செயலகத்திலிருந்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி-4991)

# மன்மோகன் 9ஆவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தோனேசியா பயணம்



(பாலி)

பிரதமர் மன்மோகன்சிங் 4 நாட்கள் பயணமாக இந்தோனேசியா நாட்டுக்கு சென்றுள்ளார். இந்தோனேசியா நாட்டின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான பாலி தீவில் இந்தியா தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப் பின் (இந்தோ–ஆசியன்) 9 ஆவது உச்சி மாநாடும் கிழக்கு ஆசிய நாடுகள் கூட் டமைப்பின் 6 ஆவது உச்சி மாநாடும் நடக்கின்றன.

ஆசியா கண்டத்தில் முக்கிய நாடாக விளங்கும் இந்தியா இந்த இரு கூட்டமைப்பிலும் அங்கம் வகிக்கிறது. ஆகவே இந்த இரு உச்சிமாநாடுகளிலும் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் டில்லியிலிருந்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கீழ்திசை நாடுகள் விவகாரங்களை கவனிக்கும் முதன்மைச் செயலாளர் சஞ்சய் சிங் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் குழுவினருடன் தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்றார்.

**சிறப்பான வரவேற்பு**

அவர் பாலி தீவுக்குப் போய்ச் சேர்ந்த வுடன் அவருக்கும் இந்திய தூதுக்குழுவினருக்கும் அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கபட்டது.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன பிரதமர் வென் ஜியாபோ, கம்போடியா பிரதமர் ஹுன் சென் ஆகியோரை பிரத மர் மன்மோகன்சிங் சந்தித்து பேச திட்டமிட்டு உள்ளார்.

**ஒபாமாவுடன் சந்திப்பு**

முதற்கட்டமாக காலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்து பேசுகிறார். கடந்த ஆண்டு ஒபாமா இந்தியா வந்திருந்த போது இருவரும் இந்தியா–அமெரிக்கா இடையேயான நல்லுறவு, பயங்கரவாத ஒழிப்பு, பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து முக்கிய மான பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர். பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. இருவருக்குமிடையேயான இந்த சந்திப்புக்கு பின்னர் இருவரும் இப்போதுதான் முதன்முறையாக சந்திக்கிறார்கள்.

அப்போது இருவருக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் குறித்து பிரதமர் மன்மோகன்சிங் ஒபாமாவுடன் ஆய்வு செய்யவுள்ளார்.

அத்துடன் சமீபத்திய உலக விவகாரங்கள், மண்டல விவகாரங்கள், இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்துவார்கள். ஆகவே இந்த சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**சீன பிரதமருடன்**

இந்தச் சந்திப்புக்கு பின்னர் சீன பிரதமர் வென்ஜியாபோவை மன்மோகன்சிங் சந்திக்கவுள்ளார். அப்போது இரு நாடுகளுக்கு மிடை யேயான உறவுகள், பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் பேசவுள்ளனர்.

இன்று காலையில் சுசிலோ பாம்பாங் யுதோயோனோவுடன் மன்மோகன்சிங் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதன்பின்னர் பாலி சர்வதேச மையத்தில் நடைபெறும் 9 ஆவது தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் மன்மோகன்சிங் கலந்து கொள்ளவுள்ளார். இதைத்தொடர்ந்து நடைபெறும் கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டிலும் மன்மோகன்சிங் கலந்து கொள்கிறார்.

**சிங்கப்பூர் பயணம்**

இன்று பிற்பகலில் இரு உச்சி மாநாடுகளையொட்டி நடைபெறும் நிறைவுவிழா வில் கலந்துகொள்வதற்காக மன்மோகன்சிங் பாலி தீவிலிருந்து சிங்கப்பூர் பயணமாகவுள்ளார்.

அங்கு இரண்டு நாட்கள் தங்கும் மன்மோகன்சிங் சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி , பிரதமர் ஆகியோருடன் இரு நாடுகளின் உறவுகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலா தொடர்பாக முக்கிய பேச்சு நடத்துகிறார். பிரதமர் மன்மோகன்சிங் இந்தோனேசியா புறப்படுவதற்கு முன்னதாக ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அதில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியா மிகப்பெரிய ஒத்துழைப்பு கொண்டுள்ளது .ஆகவே இந்த உச்சி மாநாடு இந்தியாவுக்கும் இந்தியாவின் கிழக்கு ஆசிய நாடுகளின் கொள்கைக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இரு உச்சி மாநாடுகளிலும் சுனாமி, வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் மேலாண்மையை எதிர்கொள்வது, ஒத்துழைப்பு அளிப்பது கடல் வழிப் பாதுகாப்பு அளிப்பது, பயங்கரவாதத்தை ஒழிப்பது உட்பட பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு ஒடுக்குவது ஆகியவை குறித்து மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகளுடன் இந்தியா வெளிப்படையான ஆக்கபூர்வமான திறந்த மனதுடன் விவாதிக்கும். ஆகவே இந்த பயணம் மிகப் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

(அ–2)

## பாகிஸ்தான் காவல்படையினரால் 122 இந்திய மீனவர்கள் கைது

(கட்ச்)

குஜராத் அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 122 மீனவர்களை பாகிஸ்தான் கடலோர காவல்படையினர் கைது செய்துள்ளனர்.

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டம் ஜக் காவ் கடல் பகுதியில் 26 படகுகளில் மீன வர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி 23 படகுகளில் இருந்த மீனவர்களை பாகிஸ் தானிய கடலோர காவல்படையினர் கைது செய்தனர்.

மூன்று படகுகளில் இருந்த மீன வர்கள் தப்பி தங்கள் ஊருக்கு திரும்பி தகவல் கொடுத்தனர்.

122 மீனவர்களுடன் அவர்கள் பயணித்த படகுகளையும் பாகிஸ்தானிய கடலோரப் படையினர் பறிமுதல் செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் குஜராத்தின் போர்பந்தர், மங்ரோல் மற்றும் சவுராஷ்டிராவின் ஓகா பகுதியை சேர்ந்தவர்களாவர். (அ–2)

## பாரதச் செய்திகள்

## இந்தியா– ரஷ்யா இடையே 17 ஆவது ஒத்துழைப்பு மாநாடு

(மொஸ்கோ)

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான வர்த்தக, பொருளாதார, அறிவியல், தொழில்நுட்ப, கலாசார கூட்டுக்குழு 17 ஆவது ஒத்துழைப்பு மாநாடு மொஸ்கோவில் உள்ள பிரசிடெண்ட் ஹோட்டலில் நேற்று முன் தினம் முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்க ளுக்கு நடைபெற உள்ளது.


இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தி வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்று முன்தினம் மொஸ்கோ சென்றுள்ளார். மொஸ்கோவில் அவர் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்துகிறார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசுகிறார். இந்த சந்திப்பு குறித்து இந்தியா –ரஷ்யா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் முன்கூட்டியே விவாதிக்கவுள்ளனர்.

இந்திய–ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டத்திலான இந்த மாநாட்டில் ரஷ்ய துணை பிரதமர் செர்ஜி இவானோவை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கலாசாரம் போன்ற துறைகளில் இரு நாடுகளின் ஒத்துழைப்பு குறித்து இவர்கள் விவாதிக்க வுள்ளனர்.

(அ–2)

## அக்னி-4 ஏவுகணை சோதனையில் சாதனை படைத்த கேரளப்பெண்

(புதுடில்லி)



அக்னி–4 ஏவுகணை சோதனை சமீபத்தில் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது. இந்த வெற்றியின் பின்னணியில் கேரள பெண் விஞ்ஞானி ஒருவரின் சாதனையும் அடங்கியுள்ளது. அக்னி–4 ஏவுகணைச்சோதனை கடந்த ஆண்டு முதன் முதலாக நடத்தப்பட்ட போது அந்தச்சோதனை தோல்வியில் முடிந்தது. இதனால் அக்னி4 ஏவுகணையை சீரமைக்கும் பொறுப்பு இராணுவ ஆய்வுத் துறையில் உயர்பதவியிலுள்ள டெசிதாமசிடம் என்ற பெண் விஞ்ஞானியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவர் கேரளாவைச் சேர்ந்தவர். 48 வயாதன டெசிதாமஸ் ஏவுகணை தயாரிப்பு திட்டத்திற்கு தலைமையேற்ற முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தலைமையில் செயற்பட்ட குழுதான் அக்னி4 ஏவுகணையை சிறப்பாக சீரமைத்து சோதனையிலும் வெற்றி பெற்றுள்ளது. இந்த பொறுப்பை ஏற்றபோதே டெசிதாமஸ் ஏவுகணை பெண் என்ற சிறப்பைப் பெற்றார். சோதனை வெற்றி பெற்றுள்ளதால் இவர் அக்னி புத்திரி என்று புகழப்படுகிறார்.

அணு ஆயுதங்களை ஏந்தி 3 ஆயிரத்து 500 கி.மீற்றர் வரை சென்று தாக்கும் திறனுள்ள அக்னி 4இன் வெற்றி ஏவுகணை தொழில்நுட்பத்தில் ஒரு மைல்கல் ஆகும். இத்தகைய நவீன ஏவுகணைகள் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளது. இந்த ஏவுகணையின் மூலம் ஏவுகணை தொழில்நுட்பத்தில் சீனாவுக்கு நிகரான பலத்தை இந்திய இராணுவமும் பெற்று விட்டது என்றே சொல்ல வேண்டும்.

ஏவுகணை திட்ட பிரிவில் டெசிதாமஸ் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் பெற்றிருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் வழிகாட்டுதலின் பேரில் பல ஏவுகணை திட்டப்பணிகளை இவர் சிறப்பாக செய்துள்ளார்.


இது குறித்து அவர் தெரிவிக்கையில், அறிவியலுக்கு ஆண்–பெண் என்ற வித்தியாசம் கிடையாது. இந்த துறையில் நான் ஒரு விஞ்ஞானி. இந்த துறை மிகவும் முக்கியம் வாய்ந்தது. என் பிரிவில் மேலும் 6 பெண் விஞ்ஞானிகள் உள்ளனர். அக்னி 4 ஏவுகணை வெற்றியில் அவர்கள் அனைவருக்கும் முக்கிய பங்கு உள்ளது என தெரிவித்தார். (அ–2)

## ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

பிரபல திரைப்பட இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஸ்லம்டாக் மில்லியனர் படத்துக்கு இசையமைத்ததற்காக ஒஸ்கார் விருது பெற்றார்.

சர்வதேச அளவில் ரசிகர்களின் உள்ளத்தை கவர்ந்துள்ள அவரது திறமையைப் பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்க உள்ளதாக டுபாய் சர்வதேச திரைப்பட விழாவின் தலைவர் அப்துல் ஹமீது ஜுமா தெரிவித்துள்ளார்.

டுபாயில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை சர்வதேச திரைப்பட விழா நடைபெற உள்ளது. ஏற்கனவே இந்த விருதை அமிதாப், சுபாஷ்



கய், ஷாருகான் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ–2)

## ஆப்கான் இராணுவத்திற்கு பயிற்சி அளிக்க இந்தியா முயற்சி

(சென்னை)

ஆப்கானிஸ்தான் இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

சமீபத்தில் இந்தியா வந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் இந்தியாவுடன் பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

இதில் ஆப்கான் இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் ஒப்பந்தம் மிக முக்கியமானதாகும். தற்போது அதற்கான செயற்பாடுகள் நடந்து வருகின்றன.

ஆப்கான் இராணுவத்திற்கு அளிக்கப்பட வேண்டிய பயிற்சி முறைகள் இறுதி வடிவம் பெற்றுள்ளன. டேராடூனில் உள்ள சர்வதேச இராணுவப் பயிற்சி பள்ளி மற்றும் சென்னை கயாவில் உள்ள இராணுவப்பயிற்சி மையங்களில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து இராணுவ தளபாடங்களும் ஆப்கானிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்ற தகவலும் வெளிவந்துள்ளன.

முன்னதாக ஆப்கானிஸ்தான் சென்று அங்குள்ள வீரர்களுக்கு இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் பயிற்சி அளித்த போது பயங்கரவாதிகள் அதிரடி தாக்குதல் நடத்தி இடையூறு செய்ததால் தற்போது அவர்கள் இந்தியா வந்து பயிற்சி எடுக்கவுள்ளனர்.

(அ–2)

# வளர்ந்து வரும் நாடுகள் அமெரிக்கா மீது தாக்குதலை மேற்கொள்ளலாம்

## அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் கருத்து




(வோஷிங்டன்)


இந்தியா,சீனா போன்ற வளரும் நாடுகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லீயான் பென்னடா கருத்து தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனம் நடத்திய பொது நிகழ்ச்சியில் பேசிய அவர், அமெரிக்காவிற்கு வளரும் நாடுகளிலிருந்து போர் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூறினார். மேலும் அமெரிக்காவிடம் பசுபிக் பகுதியில் போதுமான அளவுக்கு பாதுகாப்புகளும் ஏவுகணைகளும் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுரைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், சீனாவிடம் இராணுவத்தின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருவதாக கூறினார். மேலும் சீனாவிடம் தொலைவிலுள்ள இலக்குகளை விரைவில் தாக்கக்கூடிய ஏவுகணைகள் உள்ளதாக கூறினார்.

வெளியுறவுச் செயலாளரின் இந்த கருத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் வழிமொழிந்துள்ளார். தற்போது அரசு முறை பயணமாக அவுஸ்திரேலியா சென்றுள்ள ஒபாமா அமெரிக்க இராணுவம் பசுபிக் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் அப்பகுதியிலிருந்து இராணுவத்தை திரும்ப பெறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்று கூறியுள்ளார். ஆனால் ஜனாதிபதி மற்றும் வெளியுறவுச் செயலாளர் கருத்தை பென்டகன் செய்தியாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் சீனா நாடுகளுக்கிடையே சமரச உறவு இதுவரை ஏற்படவில்லை என்று கூறிய அவர் அப்படியிருக்கும் போது எப்படி போர் அபாயம் விடுவிக்கப்படும் என கேள்வி எழுப்பியுள்ளார். அமெரிக்காவின் இந்த கருத்துக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆனால் இதுவரை இந்தியாவிடமிருந்து எந்த ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. உலக நாடுகளில் அமைதியை விரும்பும் இந்தியா மீது அமெரிக்காவின் கருத்து சர்ச்சை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. (அ-2)

# பூமியை துளைத்து தாக்கும் வெடிகுண்டை அமெ. தயாரித்தது



(வோஷிங்டன்)

பூமியைத் துளைத்துத் தாக்கும் 13 தொன் எடை வெடிகுண்டை அமெரிக்கா தயாரித்துள்ளது. கடந்த 2007 ஆம் ஆண்டில் ஈரானும் வடகொரியாவும் பூமிக்கு அடியில் துளைத்து சென்று தாக்கும் அணு குண்டுகளை தயாரித்துள்ளதாக அமெரிக்கா கருதுகிறது. இந்தக்குண்டு பூமியில் 200 அடி ஆழத்துக்கு ஊடுருவி சென்று தாக்கும் வல்லமை படைத்தது.

இது தங்களின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என கருதிய அமெரிக்கா தானும் அதுபோன்ற அணுகுண்டை தயாரித்துள்ளது. அது 30 ஆயிரம் பவுண்டு. அதாவது 13.6 தொன் எடை கொண்டது. கடந்த ஓகஸ்ட் 2 ஆம் திகதி ரூ150 கோடி செலவில் தயாரிக்கப்பட்டது. அப்போது இதுபோன்று 8 அணுகுண்டுகள் தயாரிக்கப்பட்டன. இந்த அணுகுண்டுகள் சுமார் 6 மீற்றர் நீளம் கொண்டவை.


5ஆயிரம் பவுண்டுக்கும் மேல் எடையுள்ள வெடி மருந்துகளை தாங்கிச் சென்று பூமிக்கு அடியில் புதைத்து வைத்திருக்கும் வெடிகுண்டுகளை அழிக்கும் சக்தி கொண்டது. தற்போது ஒரு அணுகுண்டு மட்டும் அமெரிக்க விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத்தகவலை விமானப்படையின் செய்தித்தொடர்பாளர் மில்லர் தெரிவித்துள்ளார். (அ-2)




# வியாழன் உபகோளில் தண்ணீர்; நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வியாழன் கிரகத்தில் தண்ணீர் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கிரகம் வியாழன். இதற்குப் பல சந்திரன்கள் உள்ளன. எனவே வியாழன் கிரகம் குறித்து ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கடந்த 1989 ஆம் ஆண்டில் கலிலியோ கலிலி விண்வெளி ஓடத்தை அனுப்பியது. அந்த ஓடம் வியாழன் கிரகத்தின் மேற்பரப்பை ஆய்வு செய்தது.

அதில் அங்கு ஐஸ்கட்டி படிவங்கள் ஓரளவு இருப்பது தெரிய வந்தது. அது மிகத் தெளிவாக தெரியாததால் அங்கு தண்ணீர் இருப்பது சந்தேகம் என கருதினர். இந்த நிலையில் வியாழன் கிரகத்தில் உள்ள யூரோப்பா என்ற சந்திரனில் தண்ணீர் இருப்பத உறுதியாக தெரிய வந்துள்ளது. யூரோப்பாவில் 10 கிலோ மீற்றர் அளவுக்கு கனமான



ஐஸ்கட்டி படிவங்கள் உள்ளன.

அவை 3 கிலோ மீற்றர் ஆழத்துக்கு படிந்து உள்ளன. இதன் மூலம் அங்கு பெரிய கடல்களும் ஏரிகளும் இருக்க வாய்ப்பு உள்ளது. இந்த தகவலை அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் விண்வெளி இயற்பியல் நிறுவன தலைவர் பிரிட்னி தெரிவித்துள்ளார். (அ-2)

# ஒசாமா கொல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட வீடியோ புகைப்படங்களை வெளியிட முடியாது

(நியூயோர்க்)


ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் புகைப்படங்களை வெளியிட முடியாது என்று அமெரிக்க அரசு அந்நாட்டு நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.

அல்கொய்தா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் அபோதாபாத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தார். அமெரிக்கப்படையினர் அந் நாட்டு உளவு நிறுவனமான சி.ஐ.ஏ உதவியுடன் கடந்த மே மாதம் முதலாம் திகதி திடீர் தாக்குதல் நடத்தி பின்லேடனை சுட்டுக்கொன்றது. பின்லேடன் கொல்லப்பட்டதை அல்கொய்தா இயக்கமும் பின்னர் ஒப்புக் கொண்டது.

இந்நிலையில் பின்லேடன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் படங்களை வெளியிட வேண்டும் என்று ஜீடிசியல் வாட்ச் என்ற அமைப்பு என்று தகவல் உரிமை சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதற்கு சி.ஐ.ஏ தாக்கல் செய்த பதில் மனுவில் கூறப்பட்டதாவது, பின்லேடன் மீதான தாக்குதலின் போது எடுக்கப்பட்ட 52 போட்டோக்கள் மற்றும் வீடியோ நாடாக்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை மக்கள் பார்வைக்கு வெளியிட முடியாது. அவற்றை வெளியிட்டால் உலகம் முழுவதும் உள்ள அமெரிக்கர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடிக்கலாம். புகைப்படங்களில் கொடூரமான காட்சிகள் பின்லேடன் உடலில் குண்டுகள் துளைக்கப்பட்ட காட்சிகள் உள்ளன. அவற்றை வெளியிடுவது மக்களுக்கு பாதுகாப்பாக இருக்காது. எனவே அவை இரகசியமாக பாதுகாக்கப்படும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஜீடிசியல் வாட்ச் தலைவர் டாம் பிட்டன் கூறுகையில், பின்லேடன் கொல்லப்பட்ட காட்சிகளை இரகசியமாக பாதுகாப்பது என்ற அரசியல் முடிவை ஒபாமா அரசு எடுத்துள்ளது. வெளிப்படையான நிர்வாகம் தொடர்பாக சட்டங்கள் வந்து விட்ட பின்பு பின்லேடன் கொல்லப்பட்ட காட்சிகளை மக்கள் பார்வைக்கு வெளியிட வேண்டும் என்றார். (அ-2)



தாய்லாந்தில் பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாய்லாந்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிலாரி கிளிண்டன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறுவதைப் படத்தில் காணலாம்.

# வெள்ளை மாளிகை அருகில் துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞனிடம் விசாரணை



கடந்த சில நாட்களுக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை கொலை செய்ய அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் வெள்ளை மாளிகை மீது துப்பாக்கிச் சூடு நடந்தது. இச்சம்பவம் தொடர்பாக அக் குற்றவாளி மீது ஜனாதிபதி ஒபாமாவை கொலை செய்ய முயன்றதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச் சூடு நடந்தது. இதிலிருந்து பாய்ந்த குண்டுகள், வெள்ளை மாளிகையில் ஒரு யன்னலைத் தாக்கியது. வெள்ளை மாளிகை அருகே ஒரு காரை விரட்டிச் சென்ற இன்னொரு காரில் இருந்த நபர் ஏ.கே. 47 துப்பாக்கியால் சுட்டார். மேலும் இரண்டு கார்களில் ஒரு கார் பிடிபட்டது.

அக்காரிலிருந்த வாலிபர் தான் குற்றம் சாட்டப்பட்ட ஆஸ்கார் ஓர்டேகா ஹெர்னான்டஸ் என்ற 21 வயது வாலிபர் ஆவார். மேலும் சம்பவம் நடந்த போது ஜனாதிபதி ஒபாமாவின் குடும்பம் அமெரிக்காவில் இல்லை.

வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தனர். அந்நேரத்தில் இந்த துணிகரச் செயலை செய்ய அந்த வாலிபரை தூண்டியது யார் என்று பலவிதங்களில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

# ஜப்பான் அரிசியிலும் கதிரியக்கத் தாக்கம்

## தடை விதிப்பது குறித்து ஆலோசனை

(டோக்கியோ)

ஜப்பானில் புகுஷிமா அணு உலைக் கூடத்தில் ஏற்பட்ட விபத்தில் அணு கதிரியக்க கசிவு ஏற்பட்டது. இது அந்த பகுதிகளில் பரவியது. இந்த நிலையில் புகுஷிமாவில் விவசாய பண்ணையில் விளைந்த அரிசியில் கதிரியக்கம் அபாய அளவுக்கு பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இந்த பகுதியில் விளைந்த அரிசியை வியாபாரம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கலாமா என்பது குறித்து ஜப்பானிய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. (2)

தானும் கட்டளையிட மாட்டான். பிறரின் கட்டளைக்கும் கீழ்ப்படிய மாட்டான். அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன். *- ஜேர்மன் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இனப்பிரச்சினைத் தீர்வை இந்தியா விரும்புகின்றதா?

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் என யாரேனும் நம்பினால் அது மிகப்பெரும் தவறாகும்.

அரசைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் எண்ணம் அறவேயில்லை எனலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் ஊடாக காலத்தைக் கடத்துவதே அரசின் தற்போதைய பணியாக உள்ளது.

அதேநேரம் இந்த உண்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தெரியாமல் இருக்கமுடியாது.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தை நடத்துவதன் ஊடாக தனது இருப்பை காப்பாற்றிக் கொள்ள முற்படுகின்றது.

ஆக, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில்லை என்ற நோக்கமுடைய அரசும், இது நடக்கின்ற காரியம் இல்லை என்ற உண்மை தெரிந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதென்பது உலகின் முதற்தர அரசியல் நாடகம் என்று கூறக்கூடியது.

இதில் மிகவும் அப்பாவித்தனம், அரசும் கூட்டமைப்பும் நடத்தும் பேச்சுவார்த்தை மூலம் எங்களுக்கு தீர்வு கிடைக்குமெனத் தமிழ் மக்கள் நம்பிக் கொள்வதாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால், அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்புத் தேவை என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆனால், இந்தியாவோ இனப்பிரச்சினைத் தீர்வை இம்மியும் வலியுறுத்துவதாக இல்லை.

மாறாக தற்போது இந்தியாவைப் பொறுத்தவரை, உலக நாடுகளின் தலையீட்டால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடுமோ என்ற அச்சமே தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனை இன்னும் வலியுறுத்திக் கூறுவதாயின் உலக நாடுகள், இலங்கை விவகாரத்தில் தலையிடுவது இந்திய தேசத்தின் வல்லாதிக்கத்திற்கு சவால் என்று கூட இந்தியா கவலை கொள்ளவில்லை.

மாறாக, இந்தியாவின் கவலையெல்லாம் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடக்கூடாது என்பதாகும்.

இதன் காரணமாகவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடந்த கருத்தரங்கொன்றில்,

இலங்கை இனப்பிரச்சினையில் உலக நாடுகளின் தலையீடு பிரச்சினையைத் தீர்க்கமாட்டாது. அது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்ற கருத்தை இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் முன்வைத்தார்.

அவர் முன்வைத்த கருத்தை எவரும் அவரின் சொந்தக் கருத்தாகப் பார்க்க முடியாது.

ஆக, அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துவது என்பதற்கு அப்பால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா என்பதை இந்தியாவிடம் கேட்டறிவது நல்லது.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அறிய வேண்டும்.

# வெள்ளைக்கொடி குற்றச்சாட்டு அதிர்ச்சியளிப்பதாக கோத்தபாய தெரிவிப்பு

## விக்கிலீக்ஸ் தகவல்



இறுதிக் கட்ட யுத்தத்தின்போது சரணடைய முற்பட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளுமாறு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பிற்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா இராணுவத்தில் கடமையாற்றிக் கொண்டே அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் அவருக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் எனவும் கோதாபாய தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏனைய அரசியல் பிரதிநிதிகள் வெளியிடும் கருத்துக்களுக்கு முற்றிலும் முரணான வகையில் சரத் பொன்சேகா குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் அச்சுறுத்தல்கள் மற்றும் துரோகச் செயல்கள் பாரதூரமானவையாகவே கருதப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் நிலைப்பாடு நெகிழ்வுத் தன்மையுடன் காணப்படாது என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளருக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் 2010 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம் திகதி நடைபெற்ற சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டீனீசினால் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா வன்முறைசார் அணுகுமுறைகளைப் பின்பற்றக்கூடிய அபாயம் காணப்படுவதாக கோத்தபாய தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் கோத்தபாய தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளதாவது,

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படலாம். சரத் பொன்சேகாவிற்கு தேவையற்ற நெருக்கடிகள் கொடுக்கப்படவில்லை.

சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படமாட்டாதுஎன உறுதியளிக்கின்றேன்.

எனினும், பொன்சேகாவிற்கு ஆதரவளித்த இராணுவ உத்தியோகத்தர்களுக்கு இட மாற்றம் மற்றும் கட்டாய ஓய்வு அளிக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பொன்சேகா வெற்றியீட்டினால் உயிருக்கு ஆபத்துக் ஏற்படக் கூடும் என அரசாங்கத்தைச் சேர்ந்த பலர் அஞ்சுகின்றனர்.

தம்மீது நம்பிக்கையில்லாவிட்டால் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவின் குடும்பத்தாரை கேளுங்கள் என கோத்தபாய தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

தமக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகசரத் பொன்சேகா, இராஜதந்திரிகள் மற்றும் சிரேஷ்ட மதத் தலைவர்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருவதாக கோத்தாபாய குறிப்பிட்டுள்ளார்.

2005 ம் ஆண்டு அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் எதிர்க் கட்சியினர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார்.(பா)

# ஸ்ரீஅம்மா பகவானின் ஆரோக்கிய தீக்ஷையின் மகத்துவம்

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம் சிவன் கோவில் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஆரோக்கியமே ஒருவடைய செல்வம். ஆரோக்கியமாக இருந்தால் தான் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் சந்தோஷமான ஆனந்தமாக அனுபவிக்க முடியும். தேகம் என்பது இறைவன் குடிகொள்ளும் தெய்வீக அனுபவங்கள் ஏற்படும் கோயிலாகும்.

எங்களையும் கடவுளையும் தொடர்பு படுத்தும் ஒரு ஊடகமாக தேகம் விளங்குகின்றது.

மாசுபட்ட சூழலிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உடற்பயிற்சியும் நடைப்பயிற்சியும் யோகாவும் அநேகமான நோய்களைக் குணப்படுத்தும். ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழ்வதற்கு உணவு அத்தியாவசியமானதாகும். பொருத்தமற்ற உணவினாலும் மிதமிஞ்சி உண்பதாலும் ஆரோக்கியம் தவறுகின்றது. எனவே உடலின் தேவைக்கு அளவான உணவை உட்கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் எப்போதும் சுகதேகியாகவே வாழத் தகைமை பெற்றுள்ளோம். ஆழ் மனதில் கொண்டுள்ள சில நினைவுகளால் நான் சுகமில்லாதவன், கெட்டவன், பாவி, துரோகி என ஆகிவிடுகின்றோம். செய்யும் வேலைகளில் விருப்பம் இல்லாது கடமைக்காக செய்கின்றோம். எதையும் விருப்புடனும் ஆனந்தமாகவும் செய்தால் மனது திருப்தியடைந்து உடல், உள ஆரோக்கியம் சீரடைந்து துரித மாற்றம் ஏற்படுவதைக் காணலாம்.

மகிழ்ச்சியற்ற வாழ்க்கையால் நாம் நோய்வாய்ப்பட்டு வேதனை அடைகின்றோம். ஆரோக்கியமற்ற சந்தோசமில்லாத மனதின் பிரதிபலிப்பே ஆரோக்கியமற்ற சரீரமாகும். மனது நேரடியாகவோ மறைமுகமாகவோ உடலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். நாங்கள் சுகதேகிகளாக இருக்க விரும்பினால் ஆனந்தம் மிக்கவர்களாக மாற வேண்டும். இந்த ஆனந்தநிலை வாழ்க்கையில் அமையும் எனில் எங்கள் சரீரம் ஆரோக்கியமாகி விடும்.

இதற்கு எம்மிடையே மன்னிக்கும் பண்பு, மன்னிப்பு கேட்கும் பண்பு, மற்றவர்களின் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளும் பண்பு, வேண்டிய உதவிகளைச் செய்யும் சேவை மனப்பாங்கு, நன்றியுணர்வு, உள் சத்தியத்தை உணரும் பண்புகள் ஏற்பட வேண்டும்.

மேலும் கர்ம வினைகளும் எங்களுடைய ஆரோக்கியத்தை நிர்ணயிக்கின்றன. இவ்வாறான பிரச்சினைக்கு நிவர்த்தி காண பிரார்த்தனையே வழி சமைக்கும். பிரார்த்தனையின் போது நிவர்த்தியான தீர்விலும் தீர்வைக் காணும் வழியிலும் தான் எங்கள் கவனம் இருக்க வேண்டும். பிரச்சினையில் கவனம் இருக்கக் கூடாது.

இறையருளால் தான் ஆரோக்கியமானது தீர்த்து வைக்க முடியும் என்பது உண்மை. இந்த நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யும் போது ஸ்ரீ அம்மா பகவானை தாய், தந்தையாகவோ, நண்பனாகவோ, குருவாகவோ உங்கள் இருதயம் ஏற்றுக் கொள்ளும் வகையில் உணர்வுபூர்வமான பந்தத்துடன் நீங்களே கதி என சரணடைந்த நிலையில் அருள் வேண்டி மெய் மறந்த நிலையில் நோய் நீக்கி விட்டது என மனத்திரையில் இருத்தி நான் ஆரோக்கியமாக இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அனுபவிக்க வேண்டும். இச்சமயத்தில் ஸ்ரீ அம்மா பகவான் எவ்விதத்திலும் ஆரோக்கியத்திற்கான வழிகளை காட்டியருளுவார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ அம்மா பகவானுக்கு நன்றி செலுத்திஅற்புதம் பெறுவோமாக!

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

*உன்னைப் பற்றியே சிந்திக்காதே!*



✷ சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட் டும் வாழ்வில் செய்யமுற்படுவர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக்கொள் கிறான்.

✷ தீமை செய்வதால் நமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

✷ சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப்போகிறது! நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

✷ சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால் உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்த வெளிப்படும்.

✷ நம்மைப்பற்றியே சிந்தித்துக்கொண்டே இருப்பது சுயநலங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். சுயநல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

# கமநல சேவைகள் திணைக்களம் கையளிக்கப்படாமையால் விவசாயிகள் பாதிப்பு

(கொழும்பு)

வவுனியா வடக்கு கனகராயன் குளம் கமநல சேவைகள் திணைக்களமானது உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்படாது பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதன் காரணமாக மீள்குடியேற்றம் செய்யப்படும் விவசாயிகள் தமது கடமைகளை நிறைவு செய்வதில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் தமக்கான பசளை வகைகளை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் கமநல சேவைகள் திணைக்களம் உரிய இடத்தில் இயங்கும் பட்சத்தில் விவசாய செய்கைக்கு இலகுவாக இருக்கும் எனவும் தெரிவித்த அவர்கள் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள பசளை வகைகள் தனியாரின் வீடுகளிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கடந்த மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற நெடுங்கேணி பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் கனகராயன்குளம் அலுவலக பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டிய நிலையில் கடந்த 25 ஆம் திகதி தாம் மீண்டும் கமநல சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைப்பதாக தெரிவித்த போதிலும் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (அ-2)

# சற்றலைற் ரிசீவர்களை கடத்திய நபர் கைது


(கொழும்பு)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 30 சற்றலைற் ரிசீவர்களுடன் சந்தேக நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

சென்னையிலிருந்து அதிகாலை 3 மணியளவில் இலங்கை வந்த ஜெட் விமானத்தின் மூலம் குறித்த நபர் இலங்கை வந்ததாகவும் அவர் மீது சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவருடைய கையில் இருந்த மூன்று பைகளையும் சோதனையிட்ட போது குறித்த 30 சற்றலைற் ரிசீவர்களும் கைப்பற்றப்பட்டதாக கட்டுநாயக்க விமானநிலைய பிரதி சுங்கப் பணிப்பாளர் ராஜ்மோகன் வீரகேசரிக்குத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை விமான நிலைய பொலிஸாரும் சுங்க அதிகாரிகளும் மேலதிக விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# சாவ.நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை நீதியமைச்சர் ஹக்கீம் பார்வையிட்டார்



சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நீதிவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்ற கட்டடங்களை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று சென்று பார்வையிட்டுள்ளார்.

கட்டடங்களின் அமைப்பு சிறந்ததாக உள்ளதெனவும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நீதிமன்ற கட்டடங்களை திறந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்பொழுது செயற்பட்டு வரும் சாவகச் சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு விஜயம் செய்து சாவகச்சேரி நீதிவான்நீதிமன்ற நீதி பதி மாணிக்கவாசகர் கணேசராசா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடியுள்ளார். (அ-3-29)

# எத்தகைய தீர்ப்பினையும் நாம் ஏற்றுக் கொள்வோம்

## ஐ.தே.எம்.பி.சுஜீவ தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருட சிறைத்தண்டனையும் ஐயாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தீர்ப்பு தொடர்பில் நீதிமன்ற வளாகத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க கருத்து வெளியிட்டார்.

இந்த நாட்டு மக்கள் அறிவார்கள் நாம் தீர்ப்பினை ஏற்றுக்கொள்கிறோம். எனினும் இந்த தீர்ப்பு தொடர்பில் எமக்கு பாரிய விமர்சனம் ஒன்று உள்ளது.

அதேபோன்று எத்தகைய தீர்ப்பு வழங்கப்படுமென பொன்சேகா ஏற்கனவே அறிந்திருந்தார். இன்று நாம் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கும் நடமாடுவதற்கும் எமது பிள்ளைகள் பாடசாலை செல்வதற்குமான சூழநிலை முன்னாள் இராணுவத்த தளபதியே ஏற்படுத்தினார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லா தவாறு தடுத்து வைப்பதற்கான அதிகாரம் உள்ள நிர்வாகம் இலங்கையில் காணப்படுகிறது. உங்களுக்கு உரிமை உ[illegible]து. வீடுகளில் முடங்கிக்கிடக்காமல் மு[illegible] வருமாறு நாம் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். (அ-2)


BCBS CAMPUS

298B, R.A. De Mel Mawatha, Colombo-3.

**Spot Admission With Representatives on 19th November (1.00 pm to 3.00 pm) In Jaffna.**

(Cosy Restaurant VallRoom)

- France இல் கல்வி & வேலைவாய்ப்பு இரண்டையும் ஒரே நேரத்தில் தொடரவும். அத்துடன் 5 வருட விசா அனுமதியையும் பெறமுடியும்.

Degree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand.

அ[illegible]ங்கள்:

077 222 7393 - Nivetha (தமிழ்மொழி மூலம்)

(C-4599)



கண்ணீர் அஞ்சலி



திருமதி.பரம்சோதி தேவகுஞ்சரி

16.11.2011 அன்று காலமான திருமதி.பரம்சோதி தேவகுஞ்சரி அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஹஜமுகன் காட்வெயார்ஸ்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

E.S. பேரம்பலம் அன் கொம்பனி
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.P. நாகரத்தினம் ஹாட்வெயார்ஸ்
இல 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்களும்,
ஊழியர்களும்.

# பாகிஸ்தான் அணி அசத்தல்; இலங்கை போராடித் தோல்வி

மொகமெட் ஹபீஸ், இம்ரான் பர்காத்தின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற தொடர் 1:1 என்ற சமனிலை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று டுபாயில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஹபீஸ்-பர்காத் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 29.2 ஓவர்களில் 151 ஓட்டங்களைப் பகிர்ந்த போது மொகமட் ஹபீஸ் 101 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 83 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் இம்ரான் பர்காத்தும் 82 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 70 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கியவர்களில் யூனிஸ்கான் 42 ஓட்டங் களை எடுத்து ஓரளவு பிரகாசித்தார். ஏனையோர் பிரகாசிக்கத் தவறினர்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை யிழந்து 257 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க ;பிரசன்னா தலா 2 விக்கெட்டுக்களையும் பெரேரா, டில்சான் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 258 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு உபுல் தரங்க 4 ஓட்டங்களுடன் முதலாவது ஓவரின் 2-வது பந்திலேயே ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக கம்பனி சேர்ந்த டில்சான் -சங்கக்கார ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 22.2 ஓவர்களில் 106 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்த போது குமார் சங்கக்கார 66 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட)45 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்மிழந்தார்.

அடுத்து வந்த சாண்டிமல் சிறப்பாக ஆட மறுமுனையில் அரைச் சதம் அடித்து அசத்திய அணித் தலைவர் திலகரட்ண டில்ஷான் 78 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 64 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தன 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்கத் தவறினார்.

அடுத்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் சாண்டிமல் 31ஓட்டங்களுடன் ஆட்மிழக்க இலங்கை அணி 39.3 ஓவர்களில் 186 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து பின் வரிசை வீரர்களான மலிங்க பூச்சியத்துடனும் ஜீவன் மெண்டிஸ் 19 ;பெரேரா 4 ;பிரசன்னா 5 ஓட்டங்களுடனும் ;டில்ஹார பெர்னாண்டோ பூச்சியத்துடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில், இலங்கை அணி 48.5 ஓவர்களில் 236 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.



துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடிய அஞ்சலோ மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர்குல், சயிட் அஜ்மல் தலா 3 விக்கெட்டுக்களையும் சகிட் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் ஹபிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு சகல துறையில் ஜொலித்த மொர்கமெட் ஹபிஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.





ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் சிறிலங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டின் தேசிய நேர்மைத்திறன் மதிப்பீட்டு ;ஆட்சி அறிக்கை ஆகியவை அண்மையில் கொழும்பு தலைமையகத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைக்கப்படுவதையும் கலாநிதி தேவநேசன் நேசையா அறிக்கைகளின் மதிப்பீட்டுரையை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.தர)ப் பரீட்சை 2011 -டிசெம்பர் (எழுத்துப் பகுதி)

### நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | | நேரம் | பிற்பகல் | | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2011 டிசெம்பர் 12 | 11 பௌத்த சமயம்<br>12 சைவநெறி<br>14 கத்தோலிக்க சமயம்<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் | வினாத்தாள் I, II | 0830 - 1130 | | | |
| 2 | 2011 டிசெம்பர் 13 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் I, II | 0830 - 1130 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் III | 1230 - 1430 |
| 3 | 2011 டிசெம்பர் 14 | 33 வரலாறு | வினாத்தாள் II | 0830 - 1130 | 33 வரலாறு | வினாத்தாள் I | 1230 - 1330 |
| 4 | 2011 டிசெம்பர் 15 | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் II | 0830 - 1130 | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் I | 1230 - 1330 |
| 5 | 2011 டிசெம்பர் 16 | 31 ஆங்கிலமொழி | வினாத்தாள் I<br>வினாத்தாள் II | 0830 - 0930<br>0945 - 1145 | | | |
| 6 | 2011 டிசெம்பர் 17 | 80 தகவல் தொடர்பாடலும் தொழினுட்பவியலும்<br>81 விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்<br>82 கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும்<br>83 ஆக்கத்திறனும் தொழினுட்பவியலும் | வினாத்தாள் I,II | 0830 - 1130 | 84 நுண்கலை<br>85 மனைப்பொருளியல்<br>86 சுகாதாரமும் உடற்கல்வியும்<br>87 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்<br>92 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)<br>93 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)<br>94 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்) | வினாத்தாள் I,II | 1230 - 1530 |
| 7 | 2011 டிசெம்பர் 19 | 32 கணிதம் | வினாத்தாள் I | 0830 - 1030 | 32 கணிதம் | வினாத்தாள் II | 1230 - 1500 |
| 8 | 2011 டிசெம்பர் 20 | 40 சங்கீதம் (கீழைத்தேயம்)<br>41 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>42 சங்கீதம்(கர்நாடகம்)<br>44 நடனம்(சுதேச)<br>45 நடனம்(பரதம்)<br><br>43 சித்திரம் | வினாத்தாள் I, II<br><br>வினாத்தாள் I<br>வினாத்தாள் III | 0830 - 1130<br><br>0830 - 0930<br>0945 - 1145 | 46 இலக்கிய நயம் ஆங்கிலம்<br>47 இலக்கிய நயம் சிங்களம்<br>48 இலக்கிய நயம் தமிழ்<br>49 இலக்கிய நயம் அரபு<br>50 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) வினாத்தாள் I,II<br>51 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) வினாத்தாள் I,II<br>52 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) வினாத்தாள் I,II<br><br>43 சித்திரம் வினாத்தாள் II | | 1230 - 1530<br><br>1315 - 1515 |
| 9 | 2011 டிசெம்பர் 21 | 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>61 புவியியல்<br>62 குடியுரிமைக்கல்விமற்றும்சமூகநிர்வாகம்<br>63 முயற்சியாண்மைக் கற்கை<br>64 இரண்டாம் மொழி(சிங்களம்)<br>65 இரண்டாம் மொழி (தமிழ்)<br><br>66 பாளி<br>67 சமஸ்கிருதம்<br>68 பிரெஞ்சு<br>69 ஜேர்மன்<br>70 ஹிந்தி<br>71 ஜப்பான்<br>72 அரபு | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |

[illegible] (Correcting Fluid) [illegible]

6/4/2011

[illegible]

2011.11.02

[illegible]

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு 2012 ஆம் கல்வி யாண்டிற்கு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த சாதாரண தரத்துடன் எந்திரவியல் தொழில்நுட்பவியலாளர், இயந்திரவியல் கைப்பணியாளர், வர்த்தக கற்கை நெறி; பொது மற்றும் விசேட கற்கைநெறிகள் போன்ற வற்றுக்கு முழுநேர, பகுதிநேர விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன். முழு நேர கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ஐம்பது ரூபாவும் மாதாந்தம் உதவிக் கொடுப்பனவாக 1000ரூபாவிற்கு மேற்படாத கொடுப்பனவும், பருவகால பயணச் சீட்டு, 6 மாத உள்ளகப் பயிற்சி போன்றனவும் வழங்கப்படும்.

கற்க விரும்பும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக தகவல்களிற்கு சென்ற மாத 28ம் திகதி வர்த்தமானியைப் பார்வையிட முடியும் எனவும் அல்லது கல்லூரியில் நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கல்லூரி அதிபர் என். யோகராஜன் அறிவித்துள்ளார். (பா)

## தலைமன்னாருக்கு ....

முஸ்லிம் குடும்பங்களுடன் இணைந்து கற்பிட்டி பகுதிக்குச் சென் றிருந்தனர்.

இப்போது இந்தக் குடும்பங்கள் மீள் குடியேற்றத்திற்காக இந்தப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

ஆனால்,தலைமன்னார் துறை முகப்பகுதியின் மேற்குப் பிரதேசத்தில்கடற்படையினர் நிலை கொண்டிருப்பதனால், அந்தப்பிரதேசத்தை சேர்ந்த மக்கள் மீள்குடியேற முடியாமல் இருப்பதாகவும் இடம் பெயர்ந்து சென்றபோது இருந்ததைவிட நான்கு ஐந்து மடங்குகளாகக் குடும்பங்கள் பெருகியிருப்பதனால், அனைவருக்கும் குடியிருப்பதற்கு காணி பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மூவினங்களையும் சேர்ந்த குடும்பங்கள் எல்லோருக்குமாக 110 ஏக்கர் அளவிலான தனியார் காணியொன்றை வாங்கி , சுத்தப்படுத்தி , குடியேற முயற்சித்த போதே முன்னறிவித்தல் எதுவுமின்றி காணிக்குள் செல்வது தடை செய்யப்பட்டிருப்பதாக இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

ஆயினும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணியில் இந்தக் குடும்பங்கள் அத்துமீறி குடியேறியதாகவும், அதனாலேயேஇங்கு குடியேறுவது தடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், தற்காலிகமாகக் குடியிருப்பதற்காக தலைமன்னார் துறைமுகப்பகுதி பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணி யொன்றில் இந்தக் குடும்பங்கள் இப்போது அடிப்படை வசதிகளின்றி தங்க வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மன்னார் பிரதேச செயலாளர் மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகக் தெரிவித்துள்ளார்.(பா)

நகர சபை, யாழ்ப்பாணம்,




# TILKO JAFFNA CITY HOTEL

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டபட்ட, குளிரூட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# வெள்ளைக்கொடி...

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் போர் முடிபுக்கு வந்த போது, வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை கொன்று விடுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்ததாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்ததாக சுட்டிக்காட்டி சட்டமா அதிபர் திணைக்களம் அவர் மீது 3 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது.

இவ்வழக்கு தொடர்பான விசாரணையை ட்ரயல் அட்பார் முறையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதன் பிரகாரம்

மேல் நீதிமன்ற நீதிபதி திபாலி விஜய சுந்தர தலைமையிலான எச்.என்.பி.பி. வேரவெல, சர்பிக் ரஹூன் ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பை நேற்று முற்பகல் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜய சுந்தர வாசித்தார்.

மேற்படி வழக்கில் சரத் பொன்சேகாவை குற்றவாளியாக கண்ட நீதிமன்றம் அவருக்கு 3 வருட சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் வழங்கி தீர்ப்பளித்தது. அத்துடன் அபராதத்தை செலுத்தத் தவறினால் மேலும் 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

இதேவேளை இந்த வழக்கை விசாரணை செய்த மூன்று நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி வேரவெல, சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவித்தார். (பா)

# வடக்கு கிழக்கு பிரச்சி...

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது சபை யொன்று அமைக்க வேண்டுமா? இல்லையா? என்பதையிட்டும் நாம் பேச வேண்டியுள்ளது.

அதிகாரப்பகிர்வுக்கான அலகு வடக்காக இருக்க வேண்டுமா? அல்லது மீண்டும் இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்காக இருக்க வேண்டுமா என்பதிலும் கருத்தொற்றுமை காணப்பட வேண்டும். அதிகாரப்பகிர்வுக்கான அலகு பற்றி தீர்மானிக்கும் போது முஸ்லிம்களின் நலன் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கியப்பட்ட, பிரிக்கப்படாத இலங்கையினுள் தனது கட்சி நியாயமான நிலைபேறான நடைமுறைச் சாத்தியமான தீர்வை காண்பதில் உறுதியாக உள்ளதெனக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் பற்றி கேட்கப்பட்டபோது,

அதுவொரு பெரிய கதை எவ்வாறாயினும் அமெரிக்காவின் பிரதிநிதிகளுடனான பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக பயனுள்ளதாக அமைந்ததென குறிப்பிட்டார்.

கூட்டமைப்பு முக்கிய சந்திப்புக்களின் போது பிரதான பங்காளியான ரெலோவை புறக்கணிப்பதாக கூறப்படுவது பற்றி கேட்ட போது, யாரையும் புறக்கணிப்பதோ சேர்த்துக் கொள்வதோ எமது கட்சியின் தொழில் இல்லை. சூழ்நிலைக் கேற்ப தீர்மானங்கள் எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார். (பா)

# நீதிமன்றம் வழங்கிய...

பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டதாக சண்டே லீடர் பத்திரிகைக்கு அவர் அளித்த செவ்வி தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்றுக்கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

இதன்போது சரத் பொன்சேகா குற்றவாளி யென தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் அவருக்கு மூன்று வருட சிறைத்தண்டனையினையும் விதிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீதிபதிகள் குழுவின் தீர்ப்பினை அடுத்து குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்த சரத் பொன்சேகா தனது தரப்பு நியாயத்தை தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றி அவர்,

நீதிமன்றத்தினால் (இன்று) எனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பினை நானும் மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்த தீர்ப்பு நியாயமற்றது. இதனால் மக்களின் எதிர்பார்ப்பு சீர்குலைந்துள்ளது.

இவ்வாறானதொரு தீர்ப்பினை வழங்கிய நீதிமன்றத்தின் சுயாதீனம் வெளிப்படையாகியுள்ளது. இதனால் நீதிமன்றிற்கு எதிர்காலத்தில் கரும்புள்ளி விழப்போகிறது.

நான் சிறைக்குச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்ட ஓர் அரசியல் வாதியின் சதிகாரணமாகவே நான் இவ்வாறான தொரு தீர்ப்புக்கு உட்பட்டுள்ளேன். எவ்வாறெனினும் எதிர்காலத்தில் என்னால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளுக்கான ஆசீர்வாதமாகவே இந்தத் தீர்ப்பினை ஏற்றுக் கொள்கிறேன். எனக்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றிகள் என்றார். (பா)

# போர்க்குற்ற விசாரணைகளின்...

களையும் தளர்த்துவதற்கு ஏதுவாக வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்த மீறல்களுக்கு காரணமானவர்கள் என சில குறிப்பிட்ட இராணுவத்தினர் மீது குற்றங்களை சுமத்தி, அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் படைத்தளபதிகள் தப்பிவிட முயல்வதாக செய்திகள் கசிந்துள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் அரசிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், அது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது. அரசின் இந்த விருப்புக்கு மாறாக அறிக்கை பலவீனமாக அமையுமானால், சர்வதேச நாடுகள் ஜனாதிபதி மஹிந்த உட்பட அரசாங்க அமைச்சர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது பயணத் தடைகளை விதிக்கலாம் என அரசாங்க மட்டத்தில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தவிர, அரசமட்டத்தினரின் தனிப்பட்ட சொத்துக்களை முடக்குவதற்கும் சர்வதேச நாடுகள் முயலலாம் என அஞ்சப்படுகிறது.

இது தொடர்பாக பிரித்தானிய பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட் சகல வழிமுறைகளிலும் இவ்விவகாரம் கையாளப்படும் என்று தெரிவித்திருந்தமையும் அமெரிக்க, கனடா மற்றும் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக வெளிப்படுத்திய கருத்தையும் மேற்படி ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இது தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்தில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளையும் விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் ரமேஷின் படுகொலையுடன் தொடர்புடையவர்களையும் இனங்காணுமாறு பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வு ஆலோசகர் கபில ஹெந்த விதாரணவுக்கும் அவருடைய சிறப்பு பிரிவினருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இந்த இராணுவத்தினர் உட்பட மேலும் பலர் வன்னியில் இடம் பெற்ற படுகொலைகளுக்கும் யுத்த மீறல்களுக்கும் காரண கர்த்தாக்கள் என பாதுகாப்பு அமைச்சால் குற்றம் சாட்டப்பட உள்ளனர். இவர்கள் மீது நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட வரையறைகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யுமாறு நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைக்கும் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் சனல் 4 போன்ற ஊடகங்கள் இலங்கைக்கு எதிராக தீவிரமாக செயற்படாது என ராஜபக்ஷ சகோதரர்கள் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் பாதுகாப்பில் இருந்து காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு இலவச வீடுகளையும் இழப் பீடுகளையும் வழங்குமாறும் இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறும் ஆணைக்குழு பரிந்துரைக்கும் எனவும் நம்பப்படுகிறது.

அதேவேளை இது தொடர்பாக இராணுவ கடும் போக்காளர்களிடமிருந்து எழக்கூடிய எதிர்ப்புகளை சமாளிக்கும் நோக்குடன் போர்க்காலத்தில் யுத்த பிரதேசங்களி லிருந்து மக்கள் காப்பாற்றுவதில் இராணுவம் புரிந்த சேவையை பாராட்டும் அம்சங்களும் அறிக்கையில் இடம்பெறும்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அரசினால் பலிக்கடாவாக்கப்படவுள்ள இராணுத்தினரின் குடும்பங்களை அரசாங்கம் கவனித்துக் கொள்ளும் எனவும் அவர்களுக்கு இலவச வீடுகள் வழங்கப்படும் எனவும் மூன்றாவது துரப்பு ஒன்றின் மூலம் இவ் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாவோரில் பெரும் பகுதியினர் இரண்டு வருடாங்களின் பின்னர் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவர் எனவும் ஜனாதிபதி அலுவலகம் வாய்மொழி உத்தரவாதத்தை வழங்கியுள்ளது.

வன்னி யுத்தத்தின் இறுதி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்து இரகசிய முகாம்களில் விசாரணையின்றி அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மீது வழக்குத்தாக்கல் செய்யுமாறும் ஆணைக்குழு பரிந்துரைக்கவுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை, அரசாங்கத்தின் மீதும் சில கடுமையற்ற குற்றங்களை முன்வைக்கும் எனவும் வைத்தியசாலைகள் மீதோ அன்றி யுத்த சூனிய பிரதேசங்களில் மக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்தோ அறிக்கை எவ்வித குற்றங்களையும் சுமத்தாது. யுத்தத்தின் போது மக்களுக்கு போதுமான உணவு அனுப்பப்படாமை குறித்தும் அறிக்கை எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்காது.

இதேவேளை போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அதற்குப் பொறுப்பானவர்கள் மீதான விசாரணை குறித்தும் ராஜபக்ஷ சகோதரர்கள் பெரிதும் அக்கறை செலுத்தாமலே இருந்து வந்தனர். காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் இக்குற்றச்சாட்டுகளின் தீவிரத்தை மழுங்கடிக்கலாம் என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது.

ஆனால் யுத்தம் முடிபடைந்த பின்னர், சரணடையும் விடுதலைப்புலிகளை சுட்டுக் கொல்லுமாறு கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிடும் ஒலிப்பதிவு தம்மிடம் உள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் பசில் ராஜபக்ஷ விடம் தெரிவித்த பின்னரே அரசாங் கம் இதன் தீவிரத்தை உணரத் தொடங்கியது என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தும் அதேநேரம் இது தொடர்பான அரச ஆதரவுப் பிரசாரங்களை அனைத்துலக ரீதியில் மேற்கொள்ள பிரசார நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (பா)


## மலிவு விலையில்...

**பின்வரும் பொருட்கள் மலிவு விற்பனையில்**

3 kv மோட்டார் டைனமோ
42 இஞ்சி ஈரமா அரைக்கும் இயந்திரம்
Top Land இயந்திரம் 8 குதிரைவலு (England)
Sharp புள்ளி (பெலிட் வகைகள்)
Lancer மோட்டார் சைக்கிள் (Japan)
Tata பட்டா வாகனம்

மேற்படி பொருட்களை 19,20 ஆம் திகதிகளில்
8-4 மணிவரை கீழ்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்

**நா.குகன்**
4ஆம் ஒழுங்கை முல்லை வீதி, பரந்தன்.
(அந்தோனியார் கோவில் முன்பாக)
(சு-5003)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



எமது அன்பு மாமனார்
சரவணமுத்து பாலசுப்பிரமணியம்
அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதியாத்திரையில் கலந்து கொண்டோருக்கும், பத்திரிகை, இணையம்,தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் குறிப்பாக பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில் நிர்வாக சபையினருக்கும், யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் மற்றும் அன்னார் நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருந்தபோது நேரகாலம் பராது அன்புடன் கவனித்துக்கொண்ட வைத்தியர், உதவியாளர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று 19.11.2011 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அண்ணாமலை வீதி, சுதுமலை இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை.

(6827)

மருமக்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.